# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
14 SEP 1967
MADRAS



விநாயகப் பெருமான்

மாலை 9] பிலவங்க - ஆவணி - செப்டம்பர், 1967 [மணி 12

சென்னை அரசாங்க அறநிலையப்



திருமயிலைக் கபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத் திறப்பு விழாவில்,
தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள்
உரை நிகழ்த்துதல். (21—8—67)

## பொருளடக்கம்


1. விநாயகர் மாட்சி
2. விநாயகர் அகவல்
3. விநாயகர் அகவல் (பொழிப்புரை)
4. சிவபுராணம்
5. சிவபுராணம் (பொழிப்புரை)
6. விடை தெரியுமா ?
7. விடை விளக்கம்
8. கோயில்கள்
9. வழிகாட்டும் பெருமான்
10. சிவஞான சித்தியார் உரை
11. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
12. விளையாட்டே வினையாயிற்று
13. தாயும் உண்டோ ?
14. கட்டுரைப் பட்டியல்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாராகள் ஆகச் சேர விரும்புபவர்கள் " திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34 " என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பிலவங்க-ஆவணி-செப்டம்பர், 1967 [மணி 12


# விநாயகர் மாட்சி

**முன்னுரை :**

நம் இந்திய நாட்டிலும்—இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் தெய்வங்களுள் விநாயகரும் ஒருவர் ஆவர். விநாயகர் கோயில் இல்லாத ஊர் ஒன்றுகூட, நம் தமிழ் நாட்டில் இருத்தல் அரிது. பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும், மூலை முடுக்கர்களிலும், சாலை சந்திகளிலும், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், ஆலமரத்தடிகளிலும் அரசமரத்தடிகளிலும், விநாயகப் பெருமான் எழுந்தருளி விளங்குதல் காணலாம். அத்துணையளவுக்கு மக்களாற் பெரிதும் விரும்பித் தொழப் பெறுபவரும், எங்கும் எவர்க்கும் எளிவந்தருளும் இயல்பினருமாகத் திகழ்பவர் விநாயகப் பெருமான்! தலைவர்களுக்கெல்லாம் மேலான தலைவர் விநாயகர். (வி—மேலான; விஞ்ஞானம் என்பதிற் போல) தாமே மேலான தலைவராதலின், தமக்கு ஒரு தலைவரும் இல்லாதவர் விநாயகர். (வி—இன்மை; விமலன் என்பதிற்போல)

**பழமையும் பெருமையும் :**

விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, இந்தியக் கலாசாரம் பரவியுள்ள ஜாவா, பாலி, சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், கம்போடியா, சம்பா, அன்னம், சயாம், மலேயா, பர்மா, சிலோன் போன்ற ஏனைய பிற அயல் நாடுகளிலுங் கூட, விநாயகர் வழிபாடு பரவியிருக்கிறது.

திரு. சமன்லால் (Chaman Lal) என்பவர் தாம்எழுதியுள்ள "இந்துஅமெரிக்கா" (Hindu America) என்னும் நூலில், மெக்சிகோ (Mexico) பெரு (Peru) முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளிலும்கூட, மிகப் பழங் காலத்திலேயே விநாயகர் வழிபாடு பரவி யிருந்ததென்று பல சான்றுகளுடன் விளக்கி நிறுவுகின்றனர்.

சர் மானியர் வில்லியம்ஸ் ((Sir Monier Williams) என்னும் பேரறிஞர், ஜேனஸ் (Janus) என்னும் உரோம நாட்டுக் கடவுளுக்கும், கணேசர் (Ganesh) என்னும் நம் இந்திய நாட்டுக் கடவுளுக்கும் இடையே தொடர்பும் ஒப்புமையும் இருப்பதாகக் கருதுகின்றனர். எச் செயலையும் தொடங்குதற்கு முன்னர் முதற்கண் வழிபடப்பெறும் கடவுளாகக் கணேசர் நம் நாட்டில் விளங்குதல் போலவே, உரோமநாட்டிலும் ஜேனஸ் (Janus) என்னும் கடவுள் விளங்கி வந்திருக்கின்றனர். அதனாலேயே ஓர் ஆண்டிற்குரிய மாதங்களுள் முதல் மாதமானது, 'ஜேனஸ்' என்னும் கடவுளின் பெயரை ஒட்டி, ஜனவரி (January) எனப் பெயர் வைத்து, அங்கு வழங்கப் பெறுவதாயிற்று.

ஏறத்தாழக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள், விநாயகர் திருவுருவம் காணப்படுவதாக டாக்டர் ஜெ. பர்கெஸ் (J. Burgess) என்பவர் குறிப்பிடுகின்றார்.

வேதம் :

இந்துமதம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது; வேதங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை. 'மனிதகுல வரலாற்றிலேயே மிகவும் பழமை வாய்ந்ததாக எஞ்சி நிற்கும் இலக்கியச் சின்னம் வடமொழி வேதமே' என மாக்சுமுல்லர் என்னும் பேரறிஞர் கூறுகின்றார். வேதங்கள் எவ்வளவு குறைவாகப் பார்த்தாலும் கி. மு. 1500 ஆண்டுகட்கு முற்பட்டன என்பதில் ஐயமில்லை. வேதங்களுள் மிகவும் முதன்மையும் பழமையும் வாய்ந்தது இருக்கு வேதம். அதன்கண் கணபதி பற்றிய குறிப்பு "கணாநாம்த்வாம் கணபதீம் அவாமஹே" என வந்திருக்கின்றது. கணங்களுக்குத் தலைவர் கணபதி. இவரைப் 'பிரமணஸ்பதி' என வேதம் புகழ்கின்றது. தைத்திரீய ஆரண்யகம் இறைவனைத் 'தந்திந்' எனக் குறிப்பிடுகின்றது. இதன் பொருள் 'தந்தத்தை உடையவர்' என்பதாகும். எனவே, இச்சொல் விநாயகரையே குறிக்கின்றது என்பது தெளிவு. கணபதி காயத்திரி மந்திரத்திலும் "தந்நோதந்திந் பிரசோதயாத்" என்புழி 'தந்திந்' என்ற பெயர் குறிப்பிடப் பெற்றிருப்பதும், விநாயகரின் பழமையை வலியுறுத்தும்.

வான நூல் :

இந்நாளில் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு ஓர் ஆண்டு கணிக்கப் பெற்று வருகின்றது. இங்ஙனமின்றி மிகப் பழங்காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களைக் கணித்தல் அறிஞர்களின் வழக்கமாகஇருந்துவந்தது. ஞாயிற்றுக்குரிய ஓரை சிங்கவோரை என்றும், அதற்குரிய திங்கள் ஆவணியாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் ஒருமுறை என்றும், பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை,

"கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை (ஆவணி) முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரை (ஆடி) ஈறாக வந்துமுடியுந் துணையும் ஓர் யாண்டு ஆம். ஆதலின், அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினர்"

என ஆசிரியர் நச்சினார்க்கினியர், "காரும்மாலையும் முல்லை" எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையிற் கூறியுள்ளது கொண்டும் தெளியப்படும். இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும் முறை சுமார் 7000 ஆண்டுகட்கு முன்பு தொடங்கி யிருத்தல் வேண்டும் என வானநூல் (Astronomy) ஆராய்ச்சி வல்லார் கருதுகின்றனர்.

ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதிக் கணிக்கப் பெற்று வந்த அப் பழங்கால முதலே, விநாயகர் வழிபாடும் தோன்றி நிலவி வரத் தலைப்பட்டிருத்தல் வேண்டும்! இன்னோரன்ன செய்திகளால், விநாயகர் வழிபாட்டின் பழமையும் பெருமையும் விளங்குதல் காணலாம்.

ஓங்கார மந்திரம் :

எல்லாப் பொருள்களுக்கும், எல்லா உயிர்களுக்கும் முதலாய் நிற்கும் எல்லாம் வல்ல இறைவனை வழிபடும் முறைகளைக் கண்டுணர்ந்த நம் பண்டைப்பெரு முன்னோர்கள், இறைவனை வழிபடுதற்குரிய மந்திரங்களுள் ஒன்றாகவும், தலை சிறந்ததாகவும், ஓங்காரம் என்பதனைக் கண்டறிந்தனர். எல்லா எழுத்தின் ஓசைகட்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓவாது ஒலி செய்து கொண்டிருக்கும் 'ஓ' என்னும் ஒலியே ஓங்காரம் எனப்படும். இவ்வியற்கை முதலோசை வட மொழியிற் 'ப்ரணவம்' என்று வழங்கப்படுகின்றது. 'ப்ரண' என்னும் சொல் 'பழைய' என்னும் பொருளைத் தரும். எனவே, 'ஓ' என்னும் ஓசை ஏனை எல்லா ஓசைகட்கும் முற்பட்டதாய் இயற்கையே தோன்றி இயங்கும் பழைமையுடையதாதல் பற்றி ஓங்காரம் 'பிரணவம்' எனப் பெயர் பெற்றது.

முத்தொழில் :

பிரணவம் எனப்படும் ஓங்கார ஒலியைப் பிரித்துக் காண முற்படின், அஃது அ+உ+ம் என்னும் மூன்று ஒலிகளாய்ப் பிரியும்.

இவற்றுள் அகார ஒலி எல்லாச் செயற்கை ஒலிகட்கும் முதற் பிரிந்து படைத்தற்றெழிலைப் புரியும்; உகார ஒலி அதன்பின்னர்த் தோன்றிச் சிறிது நேரம் நிற்பதாகலின், அதுபடைக்கப்பட்ட பொருள்களைத் தத்தம் கால எல்லையளவு நிலைநிற்கச் செய்தலாகிய காத்தற்றெழிலைப் புரியும்; மகார ஒலி உதடுகள் இரண்டும் சேர்ந்து முடிவதாகலின், அஃது அங்ஙனம் நிலை பெற்ற பொருள்களை அழிந்து போகச் செய்யும். இவ்வாறு படைத்தல் . காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் நிகழ்த்த வல்லதாகத் திகழ்தல் பற்றியே, ஓங்காரம் மிக்க சிறப்புடைய பெருமந்திரம் என மதிக்கப்பெறுகின்றது.

இயற்கை அமைப்பு :

மேலும் நமது உடம்பின்கண் உள்ள சிறந்த உறுப்புக்கள் அத்துணையும் ஓங்கார வடிவினவாகவே திகழ்கின்றன. நமது உடம்பின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் இன்றியமையாத கருவியான நெஞ்சப்பை (Heart) யின் வடிவமானது, தாமரை முகையை ஒத்து ஓங்கார வடிவமாகவே அமைந்திருக்கின்றது. இங்ஙனமே மூளை, இரைப்பை, மலக்குடர், சிறுநீர்ப்பை, கருப்பை முதலியன பலவும்கூட, ஓங்கார வடிவம் உடையனவாகக் காணப்பெறுகின்றன. ஒலிகளை யெல்லாம் கேட்பதற்குரிய கருவியாகத் திகழும் காதும்கூட, ஓங்கார வடிவம் பெற்றே விளங்குகின்றது. இவ்வியற்கை யமைப்புகள் அனைத்தும் ஓங்காரத்தின் சிறப்பையே உணர்த்தி நிற்றல் காணலாம்.

உட்பொருள் :

ஓங்காரத்தின் பிரிவெழுத்துக்கள் ஆகிய அகாரம் உகாரம் மகாரம் என்னும் மூன்றில், முதல் நின்ற அகாரம் இருக்கு வேத முதல் மந்திரம் ஆகிய 'அக்நிமீளே' என்பதன் முதலிலும், இடை உகாரம் எசுர் வேதத்தின் இடையிலுள்ள "யோநிஸ் சமுத்திரோ பந்து" என்பதன் நடுவிலும், கடைநின்ற மகாரம் சாமவேதத்தின் இறுதியிலுள்ள "சமாநம்வரம்" என்பதன் ஈற்றிலும் நின்று, வேதங்களெல்லாம் ஓம் என்னும் மொழியின் பொருளேயாம் என்பதனை அறிவிக்கின்றன என அறிஞர்கள் கூறுவர். இங்ஙனமே தமிழ் மறைகளாகிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டும்கூட ஓங்காரத்தின் உட்பொருளாதல், யாவரும் இனிதறிந்தது.

யானை முகம் :

விநாயகப் பெருமான் பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாக விளங்குபவர் என்பதனையே, அவர்தம் யானைமுகத் திருவுருவம் புலப்படுத்தி நிற்கின்றது. ஓங்கார மந்திரவுருவினை, மக்கள் தம் கட்புலம் கொளக் காணும் ஒரு சிறந்த வடிவிலே வைத்துக் காட்டி யுணர்த்த விரும்பிய நம் முன்னோர்கள், யானையின் முகமும் அதன் தொங்கி நீண்டு சுருளும் துதிக்கையும் 'ஓ' என்னும் எழுத்தின் வடிவத்தை முழுவதும் ஒத்திருத்தல் கண்டு, அதனையே விநாயகப் பெருமானின் திருவுருவமாக அமைத்துப் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

எல்லா உயிர்ப் பொருள்களிலும் முழுமுதற் கடவுள் ஒருவரே பெரியவராதல் போல, எல்லா உயிர்களிலும் யானையே உருவத்தாலும் வலிமையாலும் பெரிய தொன்றாக விளங்குகின்றது. கடவுள் தன்னை அன்பினால் உருகி வழிபடும் அடியவர்க்கு எளியராய், அவர் வேண்டுவன எல்லாம் விரும்பிச் செய்தல்போல, யானையும் தன்னிடம் அன்புகொண்டு பழகுவார்பால் தனது பெருவலிமையினைக் காட்டாமல், அவர்கட்கு மிகவும் அடங்கிப் பணிந்தொழுகி, அவர்கள் வேண்டும் உதவிகள் பலவும் செய்து பெரிதும் பயன்படுவதொன்றாகத் திகழ்கின்றது. இனைய பல பண்பொப்புமைகளும், விநாயகரை யானை எனவே கொண்டு, கவிஞர்கள் போற்றி வழிபட்டு மகிழ்தற்குக் காரணங்களாயின.

திருவுருவச் சிறப்பு :

விநாயகரின் திருவுருவம் நம் உடம்பைப் போன்றதன்று. விநாயகப் பெருமானின் திருமேனி, நம்முடைய கருமேனி கழிக்க வந்த கருணைத் திருமேனி. அது ஞானவடிவமே யாகிய திருமேனி! விநாயகரின் திருவுருவம், யானை முகமும் மூன்று கண்களும்

இரு செவிகளும், ஐந்து கைகளும், ஒரு பெரிய வயிறும், இரு குறுகிய திருவடிகளும் கொண்டது. யானை முகம் விநாயகப் பெருமான் பிரணவ வடிவினர்என்பதையுணர்த்தும். மூன்று கண்களும் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று ஒளிப்பொருள்களையும் குறிக்கும். ஐங்கரங்களும், அவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்பவர் என்பதைப் புலப்படுத்தும்

**ஐங்கரங்கள் :**

அவர் தமது கைகளுள் ஒன்றில், நம் பொருட்டு மோதகம் வைத்திருக்கின்றார்; மற்றொரு கையில் தேவர்களைக் காப்பதற்காகத் தந்தம் ஏந்தியிருக்கின்றார்; பிறிதொரு கையில், தம்முடைய தாய் தந்தையர் ஆகிய பார்வதி பரமேசுவரர்களை அபிஷேகம் செய்து வழிபடுதற் பொருட்டு 'நீர்க்கலசம்' தாங்கியிருக்கின்றார்; ஏனைய இரண்டு கைகளிலும், உயிர்களாகிய நம்மை ஆணவ மலம் ஆகிய யானையானது பற்றி நலிவுறுத்தா திருக்குமாறு செய்தற் பொருட்டுப் பாசமும் அங்குசமும் வைத்துக் கொண்டிருக்கின்றார்!

**அங்குசபாசம் :**

விநாயகரே ஒரு யானையாக இருந்தும், யானைகளை அடக்கும் கருவிகள் ஆகிய அங்குச பாசங்களை ஏந்தியிருப்பது, அவர் தமக்கொரு தலைவரை இன்றித் தாமே யாவர்க்கும் தலைவராக விளங்கும் தனி முதன்மைத் தன்மையினைத் தெளிவிக்கும். மும்மலங்கள் ஆகிய மதம் பிடித்து,ஞானம் என்னும் கம்பத்தினை யுடைத்தெறிந்து, அன்பு ஆகிய சங்கிலியை அறுத்துக் கொண்டு, அருள் என்னும் கூடத்தை விட்டு நீங்கி, உலகமாகிய பெருங்காட்டில் மேய்ந்துகொண்டு, எப்பாகர்கட்கும் அடங்காதனவாக இயங்கி வரும் உயிர்கள் ஆகிய யானைகளை அடக்கி, ஆண்டு கொண்டு அருள் புரிவதற்கு அடையாளமாகவே, விநாயகர் அங்குச பாசங்களைத் தாங்கியிருக்கின்றார் என்றலும் ஒன்று.

**எல்லார்மாந் தன்மை :**

விநாயகருடைய திருமேனியை உற்று நோக்கினால், மேலும் அரிய உண்மைகள் புலனாகும். ஒருபுறம் மருப்புடைமையால் ஆண் எனவும், மற்றொரு புறம் மருப்பின்மையாற் பெண் எனவும், இங்ஙனம் இரு திறமும் விரவி நிற்றலால் அலி எனவும் அவர் இயங்குகின்றார், அவர்தம் திருவுருவம் உயர்திணையாகவும் விளங்குகின்றது; அஃறிணையாகவும் இருக்கின்றது. தலை யானைத் தலையாகவும், உடல் தேவ உடலாகவும், கால் குறட்பூதமாகவும் அமைந்து, விநாயகர் எல்லாமாய் அல்லவுமாய் விளங்குதலை அறிவுறுத்துகின்றது.

**ஆதார ஆதேயம் :**

மிகப் பெரிய யானை வடிவமுடைய விநாயகர், மிகச் சிறிய பெருச்சாளியை வாகனமாகக் கொண்டிருப்பது, அவரே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும், தாங்கும் நிலையிலும் தாங்கப் பெறும் நிலையிலும், விளங்கி வருகின்றார் என்னும் உண்மையைப் புலப்படுத்துகின்றது.

**முடிவுரை :**

விநாயகர், சித்தி—புத்தி என்னும் இரு சக்திகளையும் தமக்குரிய தேவிமாராகக் கொண்டிருக்கின்றார். அவரை வணங்கினால், நமக்குச் சித்தி (நற்பேறு), புத்தி (நல்லறிவு) வாய்த்தல் திண்ணம்.

விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்!
விநாயகனே வேட்கை தணிவிப்பான்!— விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் வேந்தனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

—நம்பியாண்டார் நம்பிகள்

—ஆசிரியர்.

# விநாயகர் அகவல்

முன்னுரை ,

விநாயகர் காட்சிக்கு எளியவர்; கருணைக்கு இனியவர்; தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எளிதாகவும் விரைவாக வும் அருள் வழங்கும் இயல்பினர். நம் இந்திய நாட்டிலும் — இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் தெய்வங் களுள், விநாயகர் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர். சைவரும் வைணவரும், சமண ரும் பௌத்தரும்கூட, விநாயகக் கடவுளை அன்புடன் வழிபடுவர்.

விநாயகர் கோயில் இல்லாத ஊர் ஒன்று கூட, நம் தமிழ்நாட்டில் இருத்தலரிது. பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும், மூலை முடுக்கர்களிலும், சாலை சந்திகளிலும் ஆற்றங்கரை குளக்கரைகளிலும், விநாய கர் எழுந்தருளி விளங்குவார். எளிமை (சௌலப்பியம்) என்னும் இறைமைப்பண் புக்குச் சிறந்த இனிய எடுத்துக்காட்டு, விநாயகரே ஆவார்!

மக்களாற் பெரிதும் விரும்பித் தொழப் பெறுபவரும், எங்கும் எவர்க்கும் எளிவந் தருளும் இயல்பினரும் ஆகத் திகழ்பவர், விநாயகப் பெருமான்.

''தனதுஅடி வழிபடும்
அவர்இடர் கடி கணபதி''

எனத் திருஞான சம்பந்தர் விநாயகரைப் புகழ்ந்து போற்றித் துதித்துள்ளார். அதனுல் அடியவர்களின் இடர்களைக் களைந்து இன்பம் அளிப்பதில் விநாயகர் இணையற்றவர்என்பதனை நாம்உணரலாம். விநாயகரைச்சிறு குழந்தைகளும் எளிதாக, இனிதாக வழிபடலாம். நம்பியாண்டார் நம்பிகள், மெய்கண்டார் என்னும் சைவப் பெருஞ்சான்ருேர்கள், தமது குழந்தைப் பருவத்திலேயே விநாயகரை வழிபட்டு அருள் பெற்றனர் என்பது வரலாறு.

விநாயகர் வழிபாட்டிற்குக் கடினமான விதிமுறைகளோ, பலவகை அரிய ஆசார நியமங்களோ, மேற்கொள்ள வேண்டுவது இல்லை. அன்பும் நம்பிக்கையும்தான், அவரை வழிபட நமக்கு மிகவும் தேவை. அன்புடையோர் எவரும், எங்கும் எவ்வகை யிலும் அவரை இனிது வழிபடலாம் என் பது பெரியோர்கள் கருத்து.

''போதும் பெறுவிடிற் பச்சிலை
உண்டு; புனல்உண்டு; எங்கும்
ஏதும் பெறுவிடில்
நெஞ்சு உண்டு அன்றே!''

என்றபடி, அன்பினுல்மனம் உருகி, எவரும் எவ்விடத்தும் எவ்வகையிலும் விநாயகரை எளிதாக வழிபட்டு உய்யலாம்.

அவ்வையார் :

விநாயகரை வழிபட்டு உய்ந்த பெரி யோர்கள் பற்பலருள், அவ்வைப் பிராட்டி யாரும் ஒருவராவர். அவ்வைப் பிராட் டியை அறியாதவர் தமிழ் நாட்டில் எவரும் இரார். இளஞ்சிறுவர்கள் பயின்று பயன டையும் பொருட்டு ஆத்திசூடி—கொன்றை வேந்தன்—வாக்குண்டாம்—நல்வழி என் னும் சிறந்த நீதி நூல்களை அருளிச்செய்த வர் அவ்வையாரே ஆவர் என்பதனை, அனை வரும் அறிவர். பாலும் தெளிதேனும்பாகும் பருப்பும் ஆகிய நாலும் கலந்து தந்து, 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று விநாய கரை வேண்டி, வழிபட்டுப் பெரும் புலமை பெற்றவர் அவ்வையார். விநாயகரை வழி பட்டால், நமக்கு வாக்கு வன்மை யுண்டா கும்; நல்ல மனம் உண்டாகும்; திருமகளின் அருட்பார்வை நம்மீது படிந்து, நமக்குச் செல்வங்கள் பலவும் பெருகும்; நம் உடம் பிற்கு எத்தகைய நோயும் நேராது என் றும், அவ்வையார் உறுதியாகக் கூறி நமக்கெல்லாம் அறிவுறுத்தியுள்ளார்

அத்தகைய அவ்வைப் பிராட்டியார் அருளிச் செய்த அரும்பெறல் நூலே, 'விநாயகர் அகவல்' என்பது. விநாயகரைப்பற்றிய துதிநூல்கள் பலவற்றுள், 'விநாயகர் அகவல்' என்பது, மிகவும் எளியதும் இனியதும் சிறியதும் ஆகும். அளவாற் சிறியது ஆயினும், பொருளால் மிகவும் பெரியது! யோகஞான அநுபவக் கருத்துக்கள் பல பொதிந்து விளங்குவது, இந்தச் சிறந்த துதிநூல்! அவ்வையார் இதனைப் பாடியருளியது பற்றி, ஒரு வரலாறு கூறப்படுகின்றது.

வரலாறு :

அவ்வையார் ஒரு சமயம் வழக்கம்போல் விநாயகரை வழிபட்டுக் கொண்டிருந்தார். அதுபோது சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானையின் மீதும், சேரமான் பெருமாள் வெண்புரவியின் மீதும் ஏறித் திருக்கயிலை சென்று கொண்டிருத்தலை, அவர் அறிந்தார். தாமும் அவர்களுடன் திருக்கயிலைக்குச் செல்லுதல் வேண்டும் என்று விரும்பினர். தமது வழிபாட்டின் நிறைவில், விநாயகரை நோக்கி, இவ்வகவலைப் பாடினர். விநாயகர் இவ்வகவலைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாள் நாயனரும் சென்று சேர்தற்கு முன்னரே, அவ்வையாரைத் திருக்கயிலையில் தமது துதிக்கையினற் சேர்ப்பித்தார். தமக்கு முன்னே அவ்வையார் கயிலைக்கு வந்து சேர்ந்திருத்தலைக் கண்ட சேரமான் பெருமாள் மிகவும் வியப்புற்று, அவர் அங்குத் தமக்கு முன்னரே வந்து சேர்ந்தது எங்ஙனம்? என அதிசயித்து வினவினர். அப்போது அவ்வையார்,

மதுர மொழிநல் உமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினைய வல்லார்க்கு
அரிதோ? முகில்போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும்,
தேரும், அதன்பின் வரும்
குதிரையும் காதம், கிழவியும்
காதம்; குலமன்னனே

என்னும் பாடலை அருளிச் செய்து, விநாயகரின் அருளால், தாம் அவர்களுக்கு முன்னேர கயிலைக்கு வர முடிந்ததனைக் கூறி மகிழ்வித்தார் என்பது, விநாயகர் அகவல் பற்றிய வரலாறு.

முடிவுரை :

அரிய இனிய துதிநூல்களுள் ஒன்ருக விளங்கும் இத்தகைய சிறந்த 'விநாயகர் அகவல்' என்னும் நூலை, அன்புடன் மனங்கசிந்து உருகி ஓதி வழிபடுபவர் அனைவரும், விநாயகர் அருளை மிகவும் பெற்று உய்தல் திண்ணம்.

—ஆசிரியர்.



திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி ஸ்ரீ சங்கர ராமேசுவரர் தேவஸ்தானத்திற்கு, ஆலயத் தூய்மைக்காக, வெள்ளிச் சுழல் கோப்பைப் பரிசை உதவி ஆணையர் திரு. சி. எஸ். தினதயாளு, B.SC., B.L., அவர்கள் தலைமையில், நீதிபதி திரு. C. கணபதி அப்பன், B.SC., B.L., அவர்கள் வழங்குதல் (16-7-67).

# விநாயகர் அகவல்

(பொழிப்புரை)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்,

பொன்அரை ஞாணும், பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகுஎறிப்பப்,

பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்,
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்,
நான்ற வாயும் நால்இரும் [1] புயமும்,
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!

முப்பழம் நுகரும் மூடிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான்எழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே,
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளம்தனில் புகுந்து,

குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது [2] பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி,

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து,
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து,
தலம்ஒரு நான்கும் தந்துஎனக்கு அருளி,

மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறு தாரத்து அங்குஇசை [3] நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,

இடைபிங் கலையின் எழுத்து அறிவித்துக்,
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,

மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி,

இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்,

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,

கருத்தினில் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதுஎனக் கருளி,

என்னை அறிவித்து, எனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்தே,
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி, என் செவியில் [4]

(1) 'நாலிரு புயமும்' என்றும் பாடம் வழங்கும்.

(2) 'திரம் இது பொருள்' என்றும் பாடம் கொள்வர். 'ஸ்திரம்' என்னும் வடசொல் 'திரம்' என வந்தது என்பர்.

(3) 'அங்குச நிலையும்' என்றும் பாடம் உண்டு,

4) 'செவ்வியில்' (பக்குவத்தில்) என்பது, இடைக் குறையாகச் 'செவியில்' என வந்தது

**எல்லை இல்லா ஆனந்தம் அளித்து,
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,**

**சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,**

**அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு
அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புஉள்ளே காட்டி,**

**வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன்
கூட்டி,**

**அஞ்சுஅக் கரத்தின் அரும்பொருள்
தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்**

**தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!**

(பொழிப்புரை)

**(1-2)** குளிர்ச்சி பொருந்திய, நறுமணம் கமழ்கின்ற, செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் உள்ள சிலம்புகள், பலவகை இனிய இசைகளைப் பாடவும்;

**(3-4)** பொன்னாற் செய்த அரைஞாணும், பூ வேலைப்பாடுகள் அமைந்த துகில் ஆகிய துணியும், அழகிய இடுப்பில் விளங்கி அழகு வீசவும்;

**(5-8)** பெரிய வயிறும், பெரிய உறுதியான தந்தமும், யானை முகமும், விளங்குகின்ற சிவப்புப்பொட்டும், ஐந்து திருக்கைகளும், அவற்றுள் ஒன்றில் அங்குசம் என்னும் படையும், மற்றொன்றில் பாசக் கயிறும், மிடற்றின்கண் தங்கி நீங்காதிருக்கின்ற நீல நிறத்தின் மினுமினுப்பும்,

**(9-12)** தொங்கிய வாய் ஆகிய துதிக்கையும், நான்கு பெரிய தோள்களும், மூன்று கண்களும், மும்மதங்களும் பெருகி நிற்றலால் ஏற்பட்ட தழும்புகளும், இரண்டு முறம்போன்ற காதுகளும், ஒளிவிடுகின்ற பொன்னால் இயன்ற திருமுடியும், திரட்சியுற்ற மூன்று புரிகளைக் கொண்ட பூணூல் விளங்குகின்ற ஒளிமிக்க மார்பும் கொண்டு,

**(13-14)** சொல்லின் அளவுக்கு அப்பாற்பட்ட மேலான மெய்யுணர்வின் வடிவில், அற்புதமாக நிலைபெற்ற, கற்பக மரம் போலும் வள்ளன்மை யுடைய, விநாயகராகிய யானையே!

**(15-18)** மா பலா வாழை என்னும் முக்கனிகளையும் உண்ணுகின்றவரே! பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டவரே! இப்பிறப்பில் எளிய என்னை அடிமையாகச் செய்து கொள்ள விரும்பி, தாயைப் போன்ற கருணையுடன் என்பொருட்டு எழுந்தருளி வந்து, அழியாமல் வளர்ந்து கொண்டு இருக்கும் பிறவிகளுக்குக் காரணமான அறியாமையைப் போக்கி,

**(19-21)** திருத்தமாக அமைந்தனவும் முதன்மை வாய்ந்தனவும் ஆகிய திரு ஐந்தெழுத்தின் பொருள்கள் எல்லாம் தெளிவாக என்னிடம் அமையும்படி, குருவின் வடிவத்தை மேற்கொண்டு இந்நிலவுலகத்தில் தம்முடைய திருப்பாதங்கள் பதியும்படி வந்து,

**(22-24)** பொருளின் தன்மை இது, மெய்ப் பொருள் இது என்று, யான் பிறப்பு இறப்புக்களால் வருந்தி இளைக்காதபடி, எனக்கு மகிழ்ச்சியுடன் அருளிச் செய்து, வளைகின்ற படைக்கலம் போன்ற தமது கண்ணின் பார்வையினால் கொடிய சஞ்சித வினைகளைப் போக்கி,

**(25-26)** உவட்டுதல் இல்லாத இனிய உபதேசத்தினை என் செவியில் புகும்படி செய்து, தெவிட்டுதல் இன்றி மேன்மேல் இனிக்கின்ற ஞானத்தின் தெளிவையும் காண்பித்து,

**(27-28)** சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து பொறி அறிவுகளையும் அடக்கும் நெறிமுறைகளை, இன்பத்தை மிகுவிக்கின்ற தமது கருணையினால் இனிதாக எனக்கு அறிவித்து,

**(29)** தத்துவங்கள் ஆகிய கருவிகள் ஒடுங்குவதற்குரிய நுண்பொருட் கருத்துக்களை உணரும்படி செய்து,

**(30)** பிராரத்தம் ஆகாமியம் என்னும் இரண்டு வினைகளையும் நீக்கி, மாயை ஆகிய இருளை விலக்கி,

**(31)** மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிர தரம் என்னும் நான்கு வகையானசத்திநிபாத நிலைகளை உண்டாக்கி. அவற்றில் யான் நிற்கும் வண்ணம் அருளைச் செய்து,

(32) மும்மலங்களுள் ஒன்ருய் அறியாமைக்குக் காரணமான ஆணவ மலத்தை வேருடன் அறுத்து,

(33-34) ஒன்பது வாயில்களை உடைய உடலாகிய ஒப்பற்ற வீட்டின்கண் உள்ள ஐம்புலன்களாகிய கதவுகளை மூடிச் சாத்துகின்ற வழிகளையும் காண்பித்து,

(35-37) மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் பொருந்துகின்ற நிலைகளிலும் பெறுதற்கரிய பேருக நிலைக்கும்படி செய்து, தன்மையை நீக்கி மவுன நிலையை வருவித்து, இடை பிங்கலை என்ற நாடிகளின் இயல்புகளையும், இவற்றிற்குரிய சம்-அம்-வங்-சிங்என்னும் மந்திர எழுத்துக்களையும் அறியும்படி செய்து,

(38) இடை பிங்கலைகளில் உலவும் பிராணவாயுவினைச் சுழுமுனை நாடியின் இறுதியிற் செலுத்தும் வழிகளையும், அச் சுழுமுனை நாடி ஆறு ஆதாரங்களின் வழியே, மேல்நோக்கித் தலைக்குச் செல்லும் முறையையும், அவ்வாற்ருல் அங்கங்கே நிகழும் அனுபவங்களையும் ஆற்றல்களையும் தெரிவித்து,

(39) அக்கினி சூரியன் சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவிக் கொண்டு செல்லும் சுழுமுனை நாடியாகிய தூணின்கண்,

(40) தொங்கிக் கொண்டிருந்து எழுகின்ற குண்டலினி சக்திஆகிய பாம்பை மூலாதாரத்தினின்று துயில் நீங்கி எழும்படி செய்து,

(41-42) அக் குண்டலியினிடத்தில் கூடியிருக்கும் அசபை என்னும் மந்திரத்தை உரக்கச் சொல்லி,

(43-44) மூலதாரமான அக்கினி மண்டலத்தில் உறங்கி இருந்து எழுப்பப் பெற்ற நெருப்புப் போன்ற குண்டலினி சக்தியை மூச்சுக் காற்றினுல் எழுப்புகின்ற வழியை அறிவித்து,

(45-48) அமுதம் ஊற்றெடுக்கும் சகஸ்ராரம் என்பதன் நிலையினையும், சூரிய கலையாகிய பிங்கலை இயங்கும் இருதயப் பகுதியினையும், சந்திர கலையாகிய இடைகலை உயிர்ப்பின் தன்மையையும், இவற்றிற்கு நடுவே சுழுமுனை நாடியினது பதினறு படி நிலைகளையும், உடலாகிய இயந்திரத்தின் பல்வேறு உறுப்புக்களின் நிலையையும் உணரச் செய்து, பிரணவத்தோடு கூட்டி,

(49-50) ஆறெழுத்தும் நான்கெழுத்துமாகச் சொல்லப்படும் தூலம் சூக்குமம் என்னும் திருவைந்தெழுத்துக்களை எண்ணிச் செபிக்கும் வகையில் இனிதாக எனக்கு அருளிச் செய்து,

(51-52) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் மனம் புத்தி ஆங்காரம் என்னும் எட்டாலும் அமைந்த நுண்ணுடல் புலப்படும்படி, அதன் எட்டு நிலைகளும் எனக்குக் காட்சிப் படுமாறு செய்து,

(53) மனத்தினுல் சகஸ்ராரம் என்னும் சக்கரத்தின் வாயிலைக் காணுமாறு செய்து,

(54) மேலான யோக நிலையில் இருக்குமாறு வைத்து தத்துவக் கூட்டங்களினின்று நீங்குதலை இனிதாக எனக்கு அருள் புரிந்து,

(55-56) உயிரின் நிலையை உணர்த்தி, என்னை அருளால் தூய்மை செய்து, முன்னை வினையாகிய மூல கன்மத்தையும், அதன் முதலாகிய ஆணவ மலத்தினையும், வாதனை தோன்ருதபடி நீக்கி ஒழித்து,

(57-58) சொற்களும் எண்ணங்களும் இல்லாமல் நீங்கிய மன ஒருமிப்பு நிலையில், எல்லாத் தத்துவங்களையும் ஒடுக்கி, காமம் வெகுளி மயக்கங்களாகிய அழுக்குகளைப் போக்கி, எனது உள்ளத்தைத் தெளிவு அடையச் செய்து,

(59-60) அறியாமை வடிவாயும் சுட்டறிவாயும் நின்ற யான், சுட்டிறந்து உணரும் வியாபக அறிவாய் நிற்கும் நிலையை உண

ரும் வண்ணம், அருளால் தரப்படும் ஆனந்தத்தின் கண்ணே என்னை அழுந்தும்படி செய்து,

(60-61) என்னுடைய பக்குவ நிலையில் முடிவு இல்லாத பேரின்பமாகிய துரியாதீத ஆனந்தத்தைக் கொடுத்து,


(62) அந் நிலையினின்று மலங்களால் மறுபடியும் உலகியலில் மீளுதலாகிய துன்பத்தை ஒழித்து, அருள் வழியைக் காட்டி,

(63-66) ஓசையாகிய புற உலகத்தில் சதாசிவத்தினையும் மனமாகிய அகஉலகத்தில் சிவலிங்கத்தையும் காணும்படி செய்து, சிறியவற்றிற் சிறியதாகவும் பெரியவற்றிற் பெரியதாகவும், கணுக்கள் முதிர்ச்சி பெற்ற கரும்பின் உள்ளே சுவையாகவும் பரம் பொருள் இருத்தலை எனக்குக் காண்பித்து,

(67-70) சிவவேடமும் திருநீறும் என் பால் விளங்கும்படி நிலைபெறச் செய்து, உண்மை பொருந்திய அடியவர் திருக்கூட்டத்துடன் சேர வைத்து, திருவைந்தெழுத்தின் அரிய பொருளை என்மன உணர்வில் நிலைக்கும்படி உபதேசித்து,

(71-72) உண்மை நிலையை எனக்கு அளித்தருளி என்னை ஆண்டு கொண்ட பேராற்றல் மிக்க விநாயகப் பெருமானே! மணம் கமழ்கின்ற நின் திருவடிகளே எனக்குப் புகலிடம்.

—ஆசிரியர்.



திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர்

# சிவ புராணம்

முன்னுரை :

சிவபுராணம் என்பது, செந்தமிழ் மொழியில் உள்ள திருவாசகம் என்னும் தெய்வத் திருவருள் நூலின், முதற்கண் அமைந்துள்ள திருப்பதிகம் ஆகும்.

திருப்பெருந்துறையில், குருந்தமர நிழலில், இறைவனே குருவடிவாக வந்து, திருவைந்தெழுத்து உபதேசம் செய்யப் பெற்ற மாணிக்கவாசகர், அத் திருவைந்தெழுத்தையே தொடக்கமாக அமைத்துப் பாடியருளிய சிறப்பு மிக்கது, சிவபுராணம் என்னும் திருப்பதிகம்!

இப்பதிகத்திற்கு இப்பெயரை அமைத்தருளியவர் மாணிக்கவாசகரே என்பதை,

" சிந்தை மகிழச்
சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும்
ஓய உரைப்பன்யான் "

எனவரும் அகச்சான்று கொண்டு அறியலாம். திருவாசகம் ஆகிய செந்தமிழ் மாமறைக்குத் திருமுகமாகிய பிரணவம் போல அமைந்து திகழ்வது, சிவபுராணம் எனலாம்.

எளிமையும் இனிமையும் ஒலி நயமும் உடையதாகத் திகழும் சிவபுராணமானது, ஓதுபவர் எவராயினும் அவர் அனைவர்தம் கல்நெஞ்சத்தையும் கரைத்து உருக்கவல்லது! பொருள் பொதிந்த சிறந்த சிறுசிறு தொடர்களால், இப்பதிகம் அழகுற இனிதமைந்துள்ளது. ஆதலின் இளஞ்சிறுர் முதல் பெருஞ்சான்ருேர் வரையில், அனைவரும் இதனை உவந்தோதி மகிழ்வர்.

சிவஞான சுவாமிகள் :

சிவஞான போதம் என்னும் சிறந்த பெருந் தத்துவத் தமிழ் நூலுக்குப் பேருரை வகுத்தருளிய ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள், தாம் இயற்றிய சிவஞான போதப் பேருரையின் தொடக்கத்தில்,

" நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க.

...... ...... ...... ......

சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பான்யான்."

(சிவபுராணம் 1-20)

எனவரும் சிவபுராண வரிகளை மிகவும் சிறப்பும் பொருத்தமும் அமையக் கடவுள் வாழ்த்தாகவும், அவையடக்கம் போலவும், மிக்க பக்தியுடன் பெயர்த்தெடுத்து எழுதிப்போற்றியுள்ளார். திருவாசகத்தின் சிறப்பையும், சிவபுராணத் திருப்பதிகத்தின் பெருமையையும், நம் போன்றவர்கள் அறிந்து கொள்வதற்கு இஃதொரு நல்ல சான்று!

கலிவெண்பா :

இத்தகைய சிவபுராணத் திருப்பதிகம், கலிவெண்பாவால் அமைந்ததாகும். கீர்த்தித்திரு அகவல்-போற்றித் திரு அகவல் என அடுத்து வரும் பதிகங்கள் வழங்கப் பெறுதலால், ஒரு சிலர் இதனையும் அகவல் எனக் கருதுவது உண்டு. ஆயினும் இஃது 'ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால் திரிபின்றி வந்த' இன்னிசைக் கலி வெண்பாப் பாடலே ஆகும் என்பது, அறிஞர்கள் கருத்து.

இக்கலிவெண்பாப் பாடல், ஒரே செய்யுள் ஆயினும், இதனையும் பதிகம் என்று வழங்குவர் சான்றோர்! இது 95 வரிகள் கொண்ட ஒரு சிறிய செய்யுள் ஆயினும், இஃது ஒரு நூலின்கண் அமைந்திருத்தற்குரிய பலவகைக் கூறுகளையும் கொண்டதாக விளங்குகின்றது.

மங்கல வாழ்த்து :

ஒரு சிறந்த நூலின் தொடக்கத்தில், வாழ்த்து—வணக்கம்—வருபொருள் உரைத்தல் என்னும் மூன்று கூறுகள் அமைந்து காணப்படும். அம்முறையில் இதன் முதல் ஐந்து வரிகள், இறைவனின் திருவடிகள் வாழ்க, வாழ்க எனக்கூறுகின்றன. வெற்றித் திறம் பற்றிக்கூறுதலும் ஒருவகை வாழ்த்தே ஆதலின், அடுத்து வரும் ஐந்து வரிகள் வெல்க, வெல்க எனத் துதித்தலாக வந்து வணக்கம் என்னும் கூற்றில் அமைகின்றன. 'அவனருளாலே அவன் தாள் வணங்கிச் சிவபுராணம் தன்னை உரைப்பன்' என்னும் பகுதி 'வருபொருள் உரைத்தல்' என்னும் கூருக அமையும்.

இவ்வாற்ருல், வாழ்த்து—வணக்கம்—வருபொருள் உரைத்தல் என்னும் மூன்று கூறும் கொண்ட 'மங்கல வாழ்த்து' என்பதனைச் சிவபுராணம் பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

அவையடக்கம் :

இம் மங்கல வாழ்த்தின் பின் கூறப்படுவதற்குஉரிய 'அவையடக்கம்' என்னும் பகுதியும், சிவபுராணத்தில் அமைந்திருக்கக் காண்கின்ருேம்! 'கண்ணுதலான் தன் கருணை' என்பது முதல் 'நின் பெரும் சீர் பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்' என்பது அவையடக்கப் பகுதியாகும்.

நூற்பயன் :

இதன்பின் வரும் வரிகளில், உயிர்களின் பிறவி வேறுபாடுகள், இறைவன் ஆட்கொண்டருளிய தன்மை, இறைவனின் சிறப்பியல்புகள் முதலியன பலவும் விளக்கப் பெற்றுள்ளன. இறுதிக்கண்,

" சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்;
சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து "

எனவரும் வரிகளால் நூற்பயனும் நுவலப் பெற்றதாயிற்று. இவை அனைத்தையும் நுண்ணிதின் எண்ணி உணருங்கால், சிவபுராணம் என்னும் இத்திருப்பதிகமானது எத்துணை மாட்சிமை உடையது என்பது, தெற்றெனப் புலனுகும்.

முடிவுரை :

சிறந்த இத்திருப்பதிகத்தினை, நாம் அனைவரும் அன்புடன் நாடோறும் ஓதி, நலம் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.



ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

(உற்சவர்) திருத்தணிகை.

# சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க ! நாதன்தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க !

1. (பொழிப்புரை) நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்க ! எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்குபவனின் திருவடிகள் வாழ்க! கண்ணிமை ஒருகால் பொருந்தும் ஒரு சிறு நேரமும், என் நெஞ்சினின்றும் அகலாதவனுடைய திருவடிகள் வாழ்க! திருப்பெருந்துறையில் எழுந்தருளி எளியேனை ஆட்கொண்டருளி குருநாதனான மாணிக்க மணியின் திருவடிகள் வாழ்க! ஆகமங்களின் பொருளாக விளங்கி, அணுகி அருள் புரிபவனது திருவடிகள் வாழ்க! ஒருவனாக இருந்தே, பல உருவங்களை உடையவனாய், எப்பொருளினும் தங்குபவனது திருவடிகள் வாழ்க!

(குறிப்புரை) நாதன் - தலைவன், நாததத்துவத்தில் உள்ளவன். கோகழி – திருப்பெருந்துறை. அண்ணிப்பான் - அணுகி நிற்பவன். ஏகன் - ஒருவன். அனேகன் - பல உருவங்களை உடையவன்.

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடிவெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !

2. (பொழிப்புரை) எளியேனது மனவோட்டத்தைப் போக்கி என்னை அடிமை கொண்ட பேரரசனின் திருவடி வெற்றியுறுக! பிறவி ஆகிய மரத்தை வேருடன் அறுக்கும் தலைக்கோலம் உடைய பெருமானின் கழல் அணிந்த திருவடிகள் வெற்றியுறுக! அன்பில்லாத புற நெறியினர்க்கு எட்டாத தொலைவில் இருப்பவனின் பூப் போன்ற

மெல்லிய அழகிய திருவடிகள் வெற்றியுறுக! கை கூப்பி வணங்கும் அன்பர்கள், அகத்தே நினைந்து மகிழ்தற்கு உரிய தலைவனின் திருவடிகள் வெற்றியுறுக! தலைமேற் கை கூப்பும் அன்பரை உயரும்படி செய்யும் சிறப்புடையவனின் திருவடிகள் மேம்படுக!

(குறிப்புரை) வேகம் - மன ஓட்டம், அலைவு. பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன். புறத்தார் - அன்பில்லாதவர்கள். சேயோன் - தொலைவில் இருப்பவன்.

ஈசன் அடிபோற்றி ! எந்தை அடிபோற்றி !
தேசன் அடிபோற்றி ! சிவன்சே வடிபோற்றி !
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி !
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி !
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி !

3. (பொழிப்புரை) எப்பொருளையும் ஆள்வோன் திருவடிக்கு வணக்கம். எம் தந்தையின் திருவடிக்கு வணக்கம். ஒளி வடிவினன் திருவடிக்கு வணக்கம். சிவபெருமானின் சிவந்த திருவடிக்கு வணக்கம். அன்பர்களின் அன்பில் விளங்கி நிற்கும் குற்றமற்றவனது திருவடிக்கு வணக்கம். வஞ்சகம் மிக்க பிறப்புத் துன்பங்களை வேருடன் அறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம். சிறப்பு மிகுந்த திருப்பெருந்துறையில் தோன்றி, எளிவந்த நம்முடைய தேவனின் திருவடிக்கு வணக்கம். நுகர்ந்து நிரம்பாத பேரின்பத்தை அளித்தருளும் மலை போன்றவனுக்கு வணக்கம்.

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

4. (பொழிப்புரை) சிவபெருமானாகிய அவன், என் நினைவின் உள்ளே நிலை பெற இருந்த அத்தன்மையினால், அவனது திருவருளாலே, அவனுடைய திருவடிகளை வணங்கி, உள்ளம் மகிழும்படி சிவபுராணம் என்னும் இக்கலிவெண்பாவினை, முற்பிறவிகளில் செய்த தீவினைகள் முற்றும் நீங்கி ஒழியும்படி, யான் சொல்ல முற்படுகின்றேன்.

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி,
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்,
எண்இறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்!

5. (பொழிப்புரை) நெற்றியிலே கண்ணை உடைய இறைவன், தன் அருட் பார்வையைக் காட்டும் பொருட்டு அவனது திருமுன்பு சென்று அடைந்து, நினைவிற்கும் எட்டாத அழகு நிறைந்த திருவடிகளை வணங்கி, வானுலகில் நிறைந்து, மண்ணுலகில் நிறைந்து, இவற்றிற்கும் மேம்பட்டு அப்பாலாய் நிறைந்தவனே! விளக்கம் மிகுந்த ஒளி வடிவினனே! எண்ணிக்கையின் அளவினையும் கடந்து, முடிவு இல்லாமல் விரிந்து, நிற்பவனே! நினது பெரும் சிறப்பைத், தீவினையை உடைய யான், புகழ்ந்து கூறும் முறை ஒன்றனையும் அறியாதவனாய் இருக்கிறேன்.

(குறிப்புரை) கண்ணுதலான் - நெற்றியில் கண்ணை உடையவன்.

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!

6. (பொழிப்புரை) புல்லாகியும், பலவகைப் பூண்டுகளாகியும், பலதிற மரங் களாகியும், பற்பல விலங்குகளாகியும், பலவகைப் பறவைகளாகியும், பாம்புகளாகியும், கற்பாறைகளின் உள்ளாகியும், மனிதர்களாகியும், பூதக் கூட்டங்களாகியும், வலிய அரக்கர்களாகியும், முனிவர்களாகியும், தேவர்கள் ஆகியும், தோற்றுவிக்கப்பட்டு இருந்து வருகின்ற அசையாப் பொருளும், அசையும் பொருளும் ஆகிய இவைகளி னுள்ளே, யான் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

(குறிப்புரை) விருகம் - மிருகம். தாவரம் - அசையாப்பொருள். சங்கமம் - அசையும் பொருள்.

மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே!

7. (பொழிப்புரை) எங்கள் பெருமானே! உண்மையாகவே உனது அழகிய திருவடிகளைக் காணப் பெற்று இன்றைக்கு வீடுபேற்று இன்பத்தினை அடைந்தேன். யான் ஈடேறும்படி என் உள்ளத்தினுள்ளே ஓம் என்னும் வடிவமாய் நின்ற மெய்ப் பொருளே! குற்றமற்றவனே! எருதை ஊர்பவனே! வேதங்கள் 'தலைவனே!' என்று அழைக்கவும், மேல் உயர்ந்தும் கீழ் ஆழ்ந்தும், அவற்றுக்கு எட்டாமல் அகன்று நுண்ணியனாய் இருப்பவனே!

வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

8. (பொழிப்புரை) வெம்மை உடையவனே! குளிர்ச்சி உடையவனே! வேள்வி வேட்கும் தலைவனின் உள்ளத்தில் விளங்கும் தூயவனே! பொய்யாகியவை அனைத்தும் அகன்று போகும்படி, குரு வடிவில் வந்து அருள் செய்து, உண்மை அறிவாகித் திகழுகின்ற மெய்ஞ்ஞானமாகிய பேரொளியே! எந்த வகையான அறிவும் இல்லாத எளியேனுக்கு இன்பத்தைத் தந்தருளிய பெருமானே! அறியாமையை நீங்கச் செய்கின்ற நல்ல அறிவாக இருப்பவனே!

(குறிப்புரை) வெய்யாய் - வெப்பம் மிக்கவனே ! தணியாய் - குளிர்ச்சி வாய்ந்தவனே. இயமானன் - எஜமானன், தலைவன். (வேள்வி - யாகம்.)

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்!
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்!
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

9. (பொழிப்புரை) ஆக்கப்படுதலும், ஒரு கால அளவில் நிற்றலும், முடிதலும் இல்லாதவனே ! எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய் ! காப்பாய் ! அழிப்பாய் ! நீயே முடிவில் உயிர்களுக்கு அருளையும் தருவாய் ! என்னைப் பலவகைப் பிறவிகளில் செலுத்துவாய். என்னை நினது திருவடித் தொண்டில் புகும்படி செய்விப்பாய். மலரின் மணம்போல் அன்பர் உள்ளத்தில் இசைந்திருப்பவனே ! அன்பில்லாதவர்களுக்குத் தொலைவில் உள்ளவனே ! அன்பர்களுக்கு அருகில் இருப்பவனே ! சொல்லுக்கும் நினைவுக்கும் அப்பாற்பட்டுக் கடந்து மறைப்பொருளாய் நிற்பவனே.

(குறிப்புரை) நாற்றம் - மணம். நேரியாய் - போன்றவனே. சேயாய் – தொலைவில் இருப்பவனே. நணியாய் - அருகில் இருப்பவனே. மாற்றம் - சொல். மறையோன்– மறைந்து நிற்பவன், வேதப் பொருளாக இருப்பவன்.

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தஅடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்புஅறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்துஉடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை,

10. (பொழிப்புரை) கறந்த பாலிலே சருக்கரையும் தேனும் கலந்தாற்போல, அன்பிற் சிறந்த அடியவர்களின் உள்ளத்தில் தேன்போல் இனிமையாக ஊறி, நிலைபெறத் தங்கி, எடுத்த பிறவியை ஒழிக்கின்ற எங்கள் பெருமானே ! மண், புனல், அனல், கால், வான் என்னும் ஐம்பெரும் பொருள்களிலும் இரண்டறக் கலந்து நிற்றலால், பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை என்னும் ஐந்து நிறங்களை உடையவனே! தேவர்கள்போற்றவும், நீ அவர்களுக்குவெளிப்படாமல் மறைந்திருந்தாய்.

(குறிப்புரை) கன்னல் – கரும்பு.

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அறியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!

11. (பொழிப்புரை) கொடிய பாவியேனாகிய எனது அறிவு மறையும்படி மூடிய மாயமாகிய இருளை, நல்வினை தீவினை என்னும் வலிமையான கயிற்றினால் கட்டி, வெளியே தோலைப் போர்வையாக அமைத்து, எல்லா இடங்களிலும் உள்ள புழுக்களும் அழுக்குகளும் தெரியாமல் மறைத்து, அழுக்கு வடிகின்ற ஒன்பது வாயில்களை உடைய உடல் ஆகிய குடிசை மயங்கி வருந்தும்படி, புலன்கள் ஐந்தும் மாயச் செயல்களைச் செய்ய, அவற்றை எதிர் நின்று தடுக்கும் திருவுள்ளத்தினால், குற்றமற்றவனே! உன்னிடத்துக் கலந்த அன்புடையவனாகி, நெகிழ்ந்து உள்ளே உருகும் நற்பண்பு சிறிதும் இல்லாத சிறியேனுக்கு இரக்கம் காட்டி, இந்நிலத்தின் கண்ணும் குரு வடிவில் வந்து அருள்செய்து, பெருமை மிக்க திருவடிகளையும் காட்டி, நாயினும் இழிவாய்க் கிடந்த எளியேனுக்குத் தாயினும் சிறந்த அருள் வடிவான மெய்ப்பொருளே !

(குறிப்புரை) மலங்க - மயங்க. விலங்கு - விலகிச்செல்கின்ற. தத்துவன் – உண்மையானவன். நலம் - அன்பு. தயா - தயை, அருள். குடில்-குடிசை

மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!

12. (பொழிப்புரை) குற்றம் இல்லாத ஒளி விரிந்த மலரின் சுடரே ! ஒளி வடிவினனே ! இனிமை நிறைந்த அமுதமே ! சிவபுரத்தின் தலைவனே ! மும்மலம் ஆகிய பாசங்களின் தொடர்பை நீக்கி என் அறிவை வளர்க்கும் ஆசிரியனே ! அன்பினால் பெரிதும் அருளைச் செய்து, என்நெஞ்சில் இருந்த வஞ்சகங்கள் கெடும்படி அதனை விட்டு அகலாமல், நிலையாகத் தங்கிய பெரிய அருள் வெள்ளப் பெருக்காகிய நதியே !

ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

13. (பொழிப்புரை) தெவிட்டாத அமுதமே ! அளவுக்கு அடங்காத பெருமையை உடையவனே ! ஆராய்ந்து தியானிக்காதவர்களின் உள்ளத்தில் வெளிப்படாமல் மறைந்து விடுகின்ற ஞானமாகிய ஒளியாகத் திகழ்பவனே ! நீர் போல என் நெஞ்சத்தை உருகச் செய்து, என் உயிர்க்குயிராய் நிற்பவனே! இன்பமும் துன்பமு மாகிய இரண்டும் இயல்பாக இல்லாதவனே ! உயிர்களின் பொருட்டு அவை இரண்டும் உள்ளவனே !

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!

14. (பொழிப்புரை) அன்புடையவர்களுக்கு அவர்களிலும் மிக்க அன்பை உடையவனே ! எல்லாப் பொருள்களுமாய், அவையல்லாது வேறுமாய் நிற்கும் சோதி வடிவினனே ! செறிந்த இருளாக இருப்பவனே ! எளிதில் விளங்காத பெருமை உடையவனே ! எல்லாவற்றிற்கும் முதலாக இருப்பவனே ! முடிவும் நடுவும் ஆக விளங்கி, அவை அல்லாதவனுமாகத் திகழ்பவனே ! வலிய இழுத்து என்னை அடிமை கொண்ட எம் தந்தையாகிய பெருமானே ! கூரிய மெய்யறிவினால் அன்பு கொண்டு உணர்பவர்கள், தமது மனத்தினாலும் நோக்குதற்கரிய நோக்கமே ! நுட்பமாக உணர்வதற்கும் இயலாத நுட்பமான உணர்வே !

போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தா! மிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே!

15. (பொழிப்புரை) இறப்பும் பிறப்பும் வாழ்தலும் இல்லாத புண்ணியப் பொருளே ! எல்லாவற்றையும் எல்லோரையும் காக்கின்ற எங்கள் அரசனே ! காண்பதற்கரிய பெரிய ஒளியே ! ஆறு போலப் பெருகும் இன்பமாகிய வள்ளலே ! அப்பனே! யாவர்க்கும் மேலானவனே ! நிலைபெற்ற அழகுமிக்க சுடரும் ஒளியாயும், சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும், மாறுபட்டுக் கொண்டே செல்லும் இவ்வுலகத்தின் கண், வேறு வேறாக வந்து, அறிவாயும் விளங்கித் தெளிவைத் தருபவனே ! ஊற்றைப் போலச் சுரக்கின்ற உண்பதற்கினிய அரிய அமிழ்தம் போல்பவனே ! எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உரிய தலைவனே !

வேற்று விகார விடக்குஉடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே! ஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்துஇருந்து பொய்கெட்டு மெய்யானர்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டுஅழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே!

16. (பொழிப்புரை) வேறு வேறு மாறுபாடுகளை அடைகின்ற, தசையாலாகிய இவ்வுடம்பின் உள்ளே அடைபட்டுக் கிடத்தலை, இனியும் யான் பொறுக்க மாட்டேன். எங்கள் தலைவனே! தீவினைகளை அழிப்பவனே! நினக்கு அடைக்கலம் என்று, அலறிக் கதறிப் போற்றியும் புகழ்ந்தும் தியானத்தில் இருந்து, பொய்ம்மைகள் அழிந்து மெய்யருள் நிலையைப் பெற்றவர்கள், மறுபடியும் இவ்வுலகின்கண் வந்து வினைவயப் பட்ட பிறவியை அடையாதபடி, வஞ்சகம் மிகுந்த ஐம்புலன்களின் கூடாகிய இவ்வுடம் பின் கட்டினை அழிக்க வல்லவனே! நடு இருளிலே இடைவிடாமல் நடனம் இயற்றும் தலைவனே!

(குறிப்புரை) விகாரம் - மாறுபாடு. விடக்கு - தசை. ஆற்றேன் - பொறுக்க மாட்டேன். மீட்டு - மறுபடியும். குரம்பை - சிறிய வீடு.

தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்,
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்; சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

17. (பொழிப்புரை) தில்லைச் சிற்றம்பலத்தில் கூத்தாடுபவனே! தெற்கே உள்ள பாண்டி நாட்டை உடையவனே! துன்பத்தை விளைவிக்கின்ற பிறவியின் வேரை அறுப்பவனே! உனக்கு அடைக்கலம் என்று அரற்றி, அளவிட்டுச் சொல்ல முடியாத புகழை உடையவனை இயன்ற அளவும் புகழ்ந்து துதித்து, அவனது திருவடிக் கீழ்இருந்து சொல்லிய, சிவபுராணம் என்னும் இச்செய்யுளின் பொருளை உணர்ந்து ஓத வல்லவர்கள், சிவபுரமாகிய திருக்கயிலைக்குச் செல்வார்கள். அங்கே தம்மைப் பலரும் புகழ்ந்து போற்றத், தாம் சிவபிரானைப் பணிந்து, அவனது திருவடியின்கீழ் இன்புற்று இருப்பார்கள்.

(குறிப்புரை) சிவபுரம் - திருக்கைலாயம்.

# விடை தெரியுமா?

(1) ''இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை அறுத்திடும் எனஓதும்
இசைத்தமிழ் நடத்தமிழ் எனத்துறை விருப்புடன்
இலக்கண இலக்கிய கவிநாலும்
தரிப்பவர் உரைப்பவர் நினைப்பவர் மிகச்சக
தலத்தினில் நவிற்றுதல் அறியாதே
தனத்தினில் முகத்தினில் மனத்தினில் உருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் விழலாமா? ''

எனவரும் பாடலில், 'இருப்பவல்' என்பதன் பொருள் யாது? விளக்குக.

2. **'போகம் ஈன்ற புண்ணியன்'** என்னும் தொடரைக் கையாண்டவர் யார்? இத்தொடர் யாரைக் குறிக்கும்? இதன் பொருட் சிறப்பைப் புலப்படுத்துக.

3. 'ஹீலியோடொரஸ்' (Heliodoros) என்பவர் யார்? அவர் செய்த சிறந்த செயல் எது?

(4) ''சற்றே துவையலரை தம்பிஒரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை—குற்றமிலே
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி''

என்னும் இப்பாடல் யாரால், எப்போது பாடப் பெற்றது?

(5) ''மாலே மாயப் பெருமானே மாமாயனே என்றென்று
மாலே யேறி மாலருளால் மன்னுகுருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவுமாயிரத்தின்
பாலே பட்ட இவை பத்தும் வல்லார்க்கில்லை பரிவதே''

எனவரும் பாசுரத்தில், 'பாலேய் தமிழர்—இசைகாரர்—பத்தர்' எனக் குறிக்கப் பெற்றவர் யாவர்? விவரிக்க.

(6) ''மாயன் என்நெஞ்சினுள்ளான் மற்றும் யவர்க்கும் அஃதே
காயமும் சீவனும்தானே காலுமெரியுமவனே
சேயனணியன் யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்
தூயன் துயக்கன் மயக்கன் என்னுடைத் தோளிணையானே''

எனவரும் பாடலில், **'துயக்கன் மயக்கன்'** என்னும் தொடருக்கு அரும்பதவுரையில் காணப்படும் சுவைமிக்க விளக்கம் யாது?

(விடை : மறுபுறம் காண்க.)

# விடை விளக்கம்

(1) 'இருப்பவல் திருப்புகழ்' என்னும் தொடர், திருப்புகழின் சிறப்பினைத் தெளிவுற உணர்த்துவதொன்றாகக் கொள்ளலாம். 'இருப்பவல்' என்பது, ஒரு கொடிக்குப் பெயர். இது பாம்பு போல் தரையோடு படர்ந்து, கிழங்கு பெரியதாகவும் பூக்கள் சிறியதாகவும் மஞ்சளாகவும் இருக்குமாம். இஃது ஒரு காயகற்பக மூலிகை என்றும், இதனைக் கஷாயம் இட்டுக் கண்டமாலை, மேகம், உடம்புக் கோளாறு முதலியவைகளுக்குக் கொடுக்கலாம் என்றும் கூறுவர். இதன் இலையை எவ்வளவு நேரம் மென்றாலும், பற்களுக்குச் சிறிதும் மசியாது. இதனால், அயம் பற்பமாகும். இதற்குப் புத்தர்கைச் சம்மட்டி, காயசித்தி, உப்பு நீக்கி, காரீய செந்தூரி, கானற் கள்ளி எனப் பல பெயர்கள் உண்டு என்பர்.

எனவே, 'இருப்பவல் திருப்புகழ்' என்றால், உடற்பிணி நீக்குதலில் வல்ல 'இருப்பவல்' என்னும் மூலிகையைப் போன்று, உயிர்ப்பிணிகளைத் தீர்ப்பதில் வல்ல திருப்புகழ் என்னும் உண்மை புலனாகும். பண்டைத் தமிழ்ப் பெரியோர்கள் மருத்துவத் துறையில் வல்லவர்களாக விளங்கினர். **'மருத்துவன் தாமோதரனார்'** என்று ஒரு சங்ககாலப் புலவரும் இருந்தனர். அதனால், பழந்தமிழ் நூல்களிற் பல, **திரிகடுகம்—சிறு பஞ்சமூலம்**—ஏலாதி என்பனபோல, மருத்துவ முறையிலேயே பெயர்கள் அமைக்கப் பட்டிருக்கக் காண்கின்றோம். அம்முறையில், 'இருப்பவல் திருப்புகழ்' என்பதும் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்கு உரியது.

'இருப்பவல்' என்பது, இங்ஙனம் ஒரு கொடியின் பெயர் என்னும் விவரத்தினை, மலைமருந்து பிள்ளை என்னும் மருத்துவ அறிஞர் ஒருவர், 'வைத்திய அகராதி' என்னும் நூலினின்று எடுத்துக் காட்டி உணர்த்தியதாகத் தணிகைமணி. திரு. வ. சு. செங்கல் வராய பிள்ளை, எம். ஏ., அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

(2) "போகம் ஈன்ற புண்ணியன்" என்னும் தொடர், தமிழிலக்கியங்களைப் பயின்று வல்ல சிறந்த புலவர்கள், அறிந்துணர்ந்து போற்றி மகிழும் சிறந்த தொடர் களுள் ஒன்றாகும். இதனை அருளிச் செய்தவர், சீவக சிந்தாமணி என்னும் செந்தமிழ்ப் பெருங்காப்பியத்தை இயற்றிய திருத்தக்க தேவர் என்னும் சிறந்த பெரும் புலவராவர். அவர் சமண சமயத்தைச் சார்ந்த தவநலஞ் சான்ற முனிவர் ஆயினும், சிவபெருமானைக் குறித்துப் புகழ்ந்து போற்றும் முறையில், இத்தொடரை யருளிச் செய்துள்ளார்.

சீவக சிந்தாமணியின் காப்பியத் தலைவனாகிய சீவகன், தன் தந்தையாகிய சச்சந்த மன்னன், கட்டியங்காரன் என்னும் நயவஞ்சக அமைச்சனால் கொல்லப்பட்டு இறந்துபோக, அவனால் ஒரு மயில் ஊர்திப் பொறியில் ஏற்றி உயிர் தப்பும்படி உய்க்கப்

பெற்ற விசையை என்னும் தாயினுல், ஒரு மயானத்தில் கருவுயிர்க்கப் பெற்று, அங்கு வந்த கந்துக்கடன் என்னும் கருணை மிக்க வணிகன் ஒருவனுல் கண்டெடுக்கப்பெற்று, அவனது மனைவியாகிய சுநந்தை என்பவளால் நிறைபிறை நீர்மையின் நன்கினிது வளர்க்கப்பெற்று வந்தான் என்னும் வரலாற்றைக் கூறுங்கால், திருத்தக்கதேவர் இத்தொடரைக் கையாண்டுள்ளார்.

''மேகம் ஈன்ற மின்அனை யாள்தன் மிளிர்பைம்பூண்
ஆகம் ஈன்ற அம்முலை யின்பால் அமிர்தேந்தப்
போகம் ஈன்ற புண்ணியன்எய்த கணையேபோல்
மாகம் ஈன்ற மாமதி யன்னன் வளர்கின்றுன்''

மேகத்தில் தோன்றுகின்ற மின்னற் கொடியைப் போன்ற சுநந்தை என்பவள் பாலூட்டி வளர்க்க, சந்திரனைப் போன்ற சீவகன், கண்ணபிரான் வாசுதேவருக் கும் தேவகிக்கும் மைந்தனுகப் பிறந்து, நந்தகோபன் யசோதைப் பிராட்டி என்பவர் களால், கம்சனுக்கு அஞ்சி மறைவாக வளர்க்கப் பட்டாற்போல், சச்சந்தனுக்கும் விசயைக்கும் மைந்தனுகப் பிறந்து, கந்துக்கடன் சுநந்தை என்பவர்களால், கட்டியங் காரனுகிய கொடுங்கோலனுக்கு அஞ்சி மறைவாக வளர்க்கப்பட்டு வந்தான் என்பது இப்பாடலின் பொருள்.

"போகம் ஈன்ற புண்ணியன் (சிவபெருமான்) எய்த கணையேபோல் (திருமால்-கண்ணபிரான்) மாமதி அன்னுன் (சீவகன்) வளர்கின்றுன்" என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

தான் சத்தியும் சிவனுமாய் நின்று உலகத்துக்கெல்லாம் போகத்தை உண் டாக்குதலும்; திரிபுரத்தை அழித்தும் ஆலாலம் என்னும் நஞ்சை உண்டும் எல்லா உயிர்களையும் இனிது காத்தமையும்; ஆகிய சிறப்புப் பற்றிச் சிவபெருமானைத் திருத் தக்கதேவர், 'போகம் ஈன்ற புண்ணியன்' என்று புகழ்ந்து போற்றினுர்.

சிவபெருமான், திரிபுர அசுரர்களை அழிக்கச் சென்றபோது, பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மேரு மலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு சென்றுன் என்பது வரலாறு. திருமாலே கண்ணபிரானுக அவதரித்ததனுல் கண்ணபிரான்போல் சீவகன் வளர்ந்தான் என்னும் கருத்தை யுணர்த்த, 'புண்ணியன் எய்த கணையே போல் மாமதி அன்னுன் வளர்கின்றுன்' என ஆசிரியர் குறிப்பிட்டார். திருத்தக்க தேவர் சமணராயினும், சைவ சமய வரலாறுகளையும் தத்துவக் கருத்துக் களையும் அறிந்து, தக்கவாறு எடுத்துக் கையாண்டருளிய சால்பாளர் என்பது, இத் தொடரை அவர் வழங்கியவாற்றுல் இனிது புலனுகின்றது.

''பொனங்கொடி அமிர்த னுளும் பொன்நெடுங் குன்ற னுனும்
அனங்கனுக் கிலக்க மாகி அம்புகொண் டழுத்த வின்ளார்;
இனம்தமக் கெங்கும் இல்லார் இயைந்தனர் என்ப; முக்கட்
சினந்திகழ் விடையி னுனும் செல்வியும் சேர்ந்த தொத்தே''

என இதற்கு முன்னரும், சிவபெருமானும் உமாதேவியும் ஒன்று சேர்ந்தாற் போல சச்சந்த மன்னனும் விசையையும் தம்முள் அன்பினால் ஒன்றித் தகவுற மணந்து கொண்டனர் எனத் திருத்தக்கதேவர் பாடியிருத்தல் போல்வனவும் இங்கு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.

3. 'ஹீலியோடொரஸ்' (Heliodoros) என்பவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். அவர் சுங்க வம்சத்து அரசர்களுள் ஒருவரான காசிபுத்ர பகபத்திர சுங்கர் என்னும் அரசரின் ஆட்சியில் ஆண்டியால்கிடாஸ் (Antialkidos) என்னும் கிரேக்க நாட்டு அரசனின் தூதுவராக வந்து, தட்சசீலத்தில் வாழ்ந்து வந்தவர். இவர் கிரேக்க நாட்டவராக இருந்த போதிலும், வைஷ்ணராக மாறி, வைஷ்ணவ பக்தராக விளங்கி வந்தார். குவாலியர் மாநிலத்தில், பெஸ்நகர் என்னுமிடத்தில், ஒரே கல்லினால் செய்யப்பட்ட கருடத் தம்பம் ஒன்று இவரால் நாட்டப் பெற்று, இன்றும் விளங்கி வருகின்றது.

அதன்கண், 'இது தேவர்களின் கடவுள் தலைவராகிய வாசுதேவருக்கு விஷ்ணுவைவழிபடுகின்றவரும், டியோன் (Dion) என்பவரின் புதல்வரும், தட்சசீலத்தில் வாழ்பவரும், ஆண்டியல்கிடாஸ் (Antialkidos) என்னும் பேரரசரின் தூதுவராகக் காசிபுத்ர பகபத்திரரின் பேரவைக்குப் போந்திருப்பவரும் ஆகிய 'ஹீலியோடொரஸ்' என்பவரால் நாட்டப்பெற்றதாகும்' எனச் செதுக்கப்பெற்றுள்ளது. இதனைப் பேராசிரியர் ராப்சன் (Prof. Rapson) என்பவர், தம்முடைய "பழைய இந்தியா" (Ancient India) என்னும் நூலில் மொழிபெயர்த்துக் குறித்துள்ளார்.

இப்பழம் பெரும் நினைவுச் சின்னத்தினால், வைஷ்ணவத்தின் பழமையும் பெருமையும் புலனாவதுடன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய நாட்டு மக்கள் கிரேக்கம் எகிப்தியம் முதலிய பிற நாட்டு மக்களுடன் கொண்டிருந்த சிறந்த பெரும் தொடர்புகளும் வெளிப்படுகின்றன. இதனால் 'ஹீலியோடொரஸ்' என்பவர் மிகச் சிறந்த வைஷ்ணவ பக்தரும் பெரியவருமாக மதிக்கப் பெறத் தக்கவராவர் எனலாம்.

(4) இப்பாடல், சிவஞான போதப் பேருரை முதலிய பல பெரும் செந்தமிழ் நூல்களை இயற்றி உதவியருளிய மாதவச் சிவஞான சுவாமிகள், தமது மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கையில், அங்கு வந்து பணிந்து நின்ற தவசுப் பிள்ளை என்னும் தமது சமயல்காரரை நோக்கி, அருளிச் செய்தது என்பர். சுவாமிகள் பாடம் சொல்லிக்கொண்டு இடையிடையே ஒவ்வொரு தொடராகக் கூறிவர, அத் தொடர்களே ஒரு வெண்பாவாக அமைந்து விட்டமை அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது. சமையல்கார ராயினும், அவரைத் 'தம்பி' என்று அன்புநலங் தோன்ற அழைத்திருப்பது, சுவாமிகளின் சிறந்த அருள் உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. உணவும் உணர்வும் ஒன்றோடொன்று மிக்க தொடர் புடையனவாதலின், சுவாமிகள் ஆய்ந்தமைத்து உட்கொண்டு வந்த உணவு பற்றிய அரிய குறிப்பும், நம்மனோர் கருதி உணரற்பாலது.

(i) 'சற்றே துவையல் அரை' என்றது, நெய்யில்லா உண்டி பாழ் ஆதலாலும், அறிவு உழைப்பு மிக்கவர்களுக்கு இன்றியமையாதது ஆதலாலும், நெய் பெய்து சில கவளங்கள் உண்ணுதற் பொருட்டுச் 'சற்றே துவைல் அரை' என்றார்.

(ii) பித்தத்தைத் தணித்துக் கொள்ளுதற் பொருட்டுத் 'தம்பி! ஒரு பச்சடி வை' என்றார். வெப்பத்தைத் தணித்தற்கும் பச்சடி பயன்படும்.

(iii) சுண்டை வற்றல், மணித்தக்காளி வற்றல் முதலியவற்றுள் ஒன்றைக் குறித்து, 'வற்றல் ஏதேனும் வறுத்து வை' என்றார். வற்றல் உணவால் சிலேத்துமம் மிகாமற் காக்கப்பெறும். தொண்டையிலும் மார்பிலும் உள்ள 'கப நோய்' நீங்கும்.

(iv) நாடோறும் கீரை உணவு உட்கொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது. கீரையில் பல நல்ல உயிர்ச் சத்துக்கள் உண்டு. கீரைகளை உண்டு வருதலால் மலச் சிக்கல் முதலிய தீங்குகள் நீங்கும். அதனால் 'கீரை கடை' என்றார். கீரையில் பெருங் காயம் சேர்த்தால், வாத நோய்கள் அணுகா. ஆதலின்: காயம் இட்டுக் கீரை கடை' என்றார்.

(v) உண்ணும் உணவு எளியதாகவும், உடலுக்கு நலம் பயப்பதாகவும் இருப்பதோடு அன்றி, ஓரளவு நாவிற்கும் இனிய சுவை பயப்பதாகவும் மணம் வாய்ந்த தாகவும் இருத்தல் வேண்டும். ஆதலின், 'கம் எனவே மிளகுக் காய் அரைத்து வைப்பாய் கறி' என்றார். மிளகுக்காய் அரைத்து வைத்தல் உணவை எளிதாகச் செறிக்கச் செய்யும்.

சுவாமிகள் தமது தவசுப் பிள்ளைக்குச் சாதாரண முறையில் சொல்லிய தொடர்களே பாடலாக அமைந்தாலும், அதுதானும் நாம் உட்கொள்ளுதற்குரிய உணவின் கூறுபாடுகளை உணர்த்துவதாக விளங்குதலும், நம்மனோர் சிந்தித்துஇன்புறு தற்குரியனவாகும்.

(5) 'பாலேய் தமிழர்—இசைகாரர்—பத்தர்' என்னும் தொடருக்குப் பெரியோர்கள் பல வகையில் பொருள் கூறுவர்.

(i) பால் போல இனிய தமிழை உடையவர்கள், இயலுக்கு இசைய இசைஇட வல்லவர்கள்; அதாவது, ஸ்ரீ மதுரகவிகளையும் நாதமுனிகளையும் போல இருக்குமவர்கள் பக்தர் ஆவார். பகவத் குணாநுபவத்தில் நம்மாழ்வரைப் போலக், 'காலாழும் நெஞ்சடியும் கண் சுழலும்' என்றிருக்குமவர்கள் என்பர் நம்பிள்ளை.

(ii) ஸ்ரீபராங்குச நம்பியைப் பாலேய் தமிழர் என்றும், பிள்ளை உறங்கா வில்லி தாசரைப் பக்தர் என்றும் கொள்ளலாம் என்பர் ஆழ்வான்.

(iii) பாலேய் தமிழர் என்கிறது முதலாழ்வார்களை; இசைகாரர் என்கிறது திருப் பாணாழ்வாரை; பக்தர் என்கிறது பெரியாழ்வாரை என்று ஆளவந்தார் அருளிச் செய்வர்.

வைஷ்ணவப் பெரியோர்கள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் எத்துணை அளவுக்கு ஆழங்காற்பட்டுப் பாராட்டி அநுபவித்து, அரிய பெரிய பொருள் விளக்கங்களை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து அருளிச் செய்துள்ளனர் என்பது, இது போல்வனவற்றால் உணர்ந்து வியந்து வியந்து மகிழ்தற்குரியதாகும்.

(6) 'மாயன் என்நெஞ்சில் உள்ளான்' எனத் தொடங்கும் திருவாய் மொழிப் பாசுரத்தில் வரும், 'துயக்கன் மயக்கன்' என்னும் தொடரின் பொருள் விளங்குவதற்கு ஒரு சுவை மிக்க நிகழ்ச்சியினை ஈட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

வைஷ்ணவப் பெருஞ் சான்றோர்களுள் ஒருவர் ஆகிய பட்டர் என்பவரின் திருவோலக்கத்துக்குச் சாஸ்திரி ஒருவரும், ஸ்ரீ வைஷ்ணவராகிய அன்பர் ஒருவரும், பல காலும் வருதுண்டு. சாஸ்திரியார், பல நூல்களையும் கற்றுப் பெரும் புலமை பெற்றிருந்தவர். ஸ்ரீ வைஷ்ணவ அன்பரோ, கல்வி அறிவு சிறிதளவே யுடையவர். ஆயினும் சாஸ்திரியார் வருவதைக் காணுந்தோறும், 'வந்தாயோ? போகின்றாயோ?' என்றே பொதுவாக வினவி உரையாடுவர். ஆனால் ஸ்ரீ வைஷ்ணவராகிய அன்பர் தம்மைச் சேவிக்க எழுந்தருளும் போதெல்லாம், அவரைக் கண்டால் மிகவும் கிருபை பாராட்டிப் பெரிதும் ஆதரித்துக் கொண்டு, மகிழ்ச்சியுற்று எழுந்தருளி யிருப்பர்.

இவ்வியல்பைப் பலகாலும் கண்டு வந்த ஒருவர், பட்டர் பக்கலில் சேவித்து நின்று, "சுவாமி! தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற சாஸ்திரி பிரஸித்தனா யிருப்பவன். அவன் வந்தால், சாமான்யமாக விளித்து உரை யாடுகின்றீர். ஒருசாது ஸ்ரீவைஷ்ணவர் வந்தார் என்றால், அவரை மிகவும் பிரதிபத்தி பண்ணி யருளுகின்றீர். இஃது இரண்டையும் எனக்கருளிச் செய்ய வேணும்" என்றார்.

அதற்குப் பட்டர், 'ஆனால் அவர்கள் இரண்டுபேரும் எப்போதும் போலே, நாளையும் வருவார்கள். அப்போது நீர் எப்போதும் போலே பார்த்திரும். இரண்டும் சொல்லுகிறோம்' என்றார்.

அவரும் அப்படியே பார்த்திருக்க, மற்றை நாள் காலை அந்தச் சாஸ்திரி முதலிலே வந்து சேவிக்க, பட்டர் எப்போதும் போலே உரையாடியருளி, அவரை நோக்கி 'நீர் யாரைத்தான் பரதத்துவம் என்று நினைத்திருக்கிறது' என்று உசாவினார். அதற்கு அந்தச் சாஸ்திரியார், 'சிறிது பிரமாணங்கள் பிரம்மாவைப் பரதத்துவம் என்று சொல்லுகின்றன; சிறிது பிரமாணங்கள் விஷ்ணுவைப் பரதத்துவம் என்று சொல்லுகின்றன; ஆகையினாலே நம்மாலே நிச்சயிக்கப் போமோ?' என்று கூறினார்.

அது கேட்டு பட்டர் 'நல்லது' என்றிருந்து, அவர் போன பிறகு, ஸ்ரீவைஷ்ணவ அன்பர் எழுந்தருளிச் சேவிக்க, அவரையும் கிருபை செய்தருளி, அவர், "தேவரீர் யாரைத்தான் பரதத்துவம் என்று கருதி யிருக்கின்றீர்" என வினவினார். அதற்கு, 'தேவரீர் ச்ரீய:பதி நாராயணனே பரதத்துவம் என்றருளிச் செய்யுமே, அஃதொழிய அடியேன் வேறொன்று அறியேன்' என்றார். அது கேட்ட பட்டர், 'இன்னமும் உமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது எதனை? என்றார். அதற்கு அவர் 'எம்பெருமானார் திருவடிகளே உபாய உபேயம் என்று பிரசாதித்தருளுமே, அதையே தஞ்சமாக நினைத்திருப்பன்' என்று அவ்வன்பர் விடை பகர்ந்தார்.

அதைச் செவி மடுத்த பட்டர் திருவுள்ளம் உகந்து, 'அபசாரத்தை க்ஷமித்தருள்க; திருமாளிகைக்கு எழுந்தருள்க' என்று அருளிச் செய்து அவரை அனுப்பி விட்டு, பார்த்திருந்தவரை நோக்கி, "கண்டீரே இருவர்க்கும் உண்டான தாரதம்மியம்; ஆகையாலே, இவரை வணங்கவோ, அவனை வணங்கவோ? அவன் பல நூல்கள் கற்றிருந்தும், பயனின்றி, பரதத்துவம் உணராது, இதுவோ? அதுவோ? என்று துயக்கனும் மயக்கனுமாகவே வீணிற் காலத்தைக் கழித்துக் கொண்டு வறிதே கிடக்கின்றான்! அவரோ, நூலறிவு சிறிதே உடையவராயினும், ச்ரீய:பதி நாராயணனே பரதத்துவம் என்னும் தெளிவும் உறுதியும் நம்பிக்கையும் உடையவராகத் திகழ்கின்றார். எம்பெருமானார் திருவடிகளே உபாயமும் உபேயமும் ஆவன என்று, தஞ்சமாக நினைத்து ஆசாரிய பக்தி மிக்கவராக விளங்குகின்றார். இருவர்க்கும் இடையே யுள்ள இவ்வேறுபாட்டு நிலையை யுணர்ந்தே, அவரவர்க்குத் தக்கபடி யாம் நடந்து கொள்ள முற்பட்டோம்" என்று, ஐயுற்று வினவிய அன்பரைத் தெளிவு பெறச் செய்தார் என்பது அரும்பதவுரை.

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

ஆவணித் தேர்த் திருவிழா :

திருவாவடுதுறை ஆதீனம் குறுக்குத்துறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில், 9—8—67 முதல் 20—8—67 முடிய, மிகவும் சிறப்புற நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவுளப் பாங்கின்படி, தேவார இன்னிசை நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் சிறப்புற நடைபெற்றன.

பிரம்மோற்சவம் :

நாகப்பட்டினம் நவநீத கிருஷ்ண சுவாமி கோயிலில் 20-8-67 முதல் 31-8-67 வரை மிகவும் சிறப்புற நடைபெற்றது.

திருவிளக்குப் பூசை விழா :

சென்னை நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகத்தீசுவரர் கோயிலில் திரிசதி (300) திருவிளக்குப் பூசை 1-9-67 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது. ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்களும், துணை ஆணையர் திரு. ஆ. சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிவபூசை விழா :

காரைக்குடி முத்துப்பட்டினம் சிவநேசர் திருக்கூட்டத்தின் 44-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், 10-ஆம் சிவபூசை விழாவும் 23-8-67 அன்று, காரைக்குடி நகரச் சிவாலயத்தில், சிவத்திரு. தத்புருஷ தேசிகர் பாலகவி. வே. இராமநாதன் செட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அன்பர்கள் பலர் சிவதீக்கை பெற்றுக் கொண்டனர்.

# கோயில்கள்

(திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., அண்ணாமலை நகர்)

பண்டைக் காலத்தில் நம் தமிழகத்தில் ஏராளமான கோயில்கள் இருந்தன; அவைகள் தனித்தனியே பல்வேறு அமைப்புக்களையும் கொண்டு விளங்கின; அவ்வமைப்பு முறைகளையொட்டி அக்கோயில்கள் பலவகைப் பெயர்களைப் பெற்றிருந்தன. கரக்கோயில் ஞாழற்கோயில் கொகுடிக் கோயில் இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில் எனப் பலவகைக் கோயில்கள், இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தன என்னும் உண்மை,

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே"

எனத் திருநாவுக்கரசர் அருளிச்செய்த அடைவுத் திருத்தாண்டகத்தால் புலனாதல் காணலாம்.

பிற்காலத்தில் சோழர்களின் காலமே கோயில்களின் வரலாற்றில் பொற்காலம். கட்டிடக் கலையின் சிகரமான தஞ்சைப் பெருவுடையான் திருக்கோயிலும், கங்கை கொண்ட சோழேச்சரமும், மற்றும் எண்ணற்ற கலைக் கருவூலங்களும் விண்ணளாவ எழுந்தது, இந்தக் காலத்தில்தான். இந்தத் தெய்விகத் திருப்பணியைப் பாண்டியர்களும் விஜயநகர மன்னர்களும் நாயக்கர்களும் சிறப்பாகப் போற்றித் தொடர்ந்தார்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிப் பத்து நூற்றாண்டு காலத்தில் படிப்படியே வளர்ந்து, மகோன்னத நிலைக்கு வந்திருந்த இந்த அரும் பெருங் கலை, பதினெட்டாம் நூற்றாண்டில் தடைப்பட்டது. அரசியல் குழப்பங்களும், அவற்றைத் தொடர்ந்த ஆங்கில ஆட்சியும், இந்த அற்புதமான கலையில் வளர்ச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளியே வைத்துவிட்டன எனலாம்.

இப்படிப் படிப்படியே வளர்ந்த திருக்கோயில்கள் அந்தந்த நாட்டின் சிறப்பியல் புகட்கேற்ப ஒருசில வேறுபாடுகளுடனும் தனித்த இயல்புகளுடனும் பாரத நாடெங்கணும் பல்கின. குருவாயூரும், கோகர்ணமும், மல்லிகார்ச்சுனமும், பூரியும், கேதார்நாத்தும் எல்லாமே ஒப்பற்றவைதாம். ஆனாலும், தமிழனின் இதயத்தில் அரும்பி மலர்ந்த அருங்கோயில்களோ பல தனிச் சிறப்புக்களுடன், உலகம் போற்றுவதாக அமைந்து இன்றும் உலகினுக்கு அணியாய் விளங்குதல் ஒருதலை. இந்தியக் கோயில்களின் வரலாற்றில், தென்னாட்டைப் பொறுத்தவரை மற்றொரு சிறப்பான அம்சமும் உண்டு. வெளிநாட்டார் படையெடுப்புக்களுக்கும் தம் போராட்டங்களுக்கும் வட இந்தியக் கோயில்கள் பலியான அளவு தென்னாட்டுக் கோயில்கள் பாதிக்கப்பட வில்லை. இந்தியாவின் ஆன்மீகச் செல்வம் தென்னாட்டில்தான் பெருமளவு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது எனலாம்.

இந்தியக் கோயில்களின் கட்டிடக்கலை பல்வேறு நாகரிகங்களின் கலவை எனலாம். ஆரிய திராவிட அறிவுக் கூறுபாடுகளே யன்றி, கிரேக்க ரோமானிய நகரங்களின் செல்வாக்கையும் காணலாம். காந்தாரச் சிற்பங்கள் இத்தகையவைதாம்.

தாந்திரிக பௌத்தத்தின் சாயலும்கூட உண்டு. எத்தனை எத்தனை இனத்தவர் இங்குக் காலெடுத்து வைத்துள்ளார்களோ அத்தனை நாகரிகங்களின் முத்திரையும் இவற்றில் ஓரளவு பதிந்தேயுள்ளது.

காலப் போக்கில் கிராம வாழ்வில் கோயில்கள் முக்கிய இடம் பெற்றன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில் வழிபாட்டிற்கு ஊக்கம் அளித்ததை ஒட்டி அவற்றின் செல்வாக்கும் உயர்ந்தது. அநேகமாக, கிராம மக்கள் அனைவருமே நாள் வழிபாடு இயற்றி வந்தனர். கோயில்களில் விழாக்கள் நடந்தன. திருமேனிகள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. கார்த்திகை விழா, ஆதிரை விழா, தைவிழா என ஆண்டு முழுவதுமே விழாக்கள் நடைபெற்றன. பூம்பாவையை உயிர்ப்பிக்கச் சம்பந்தர் பாடிய பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் விழாக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. "இவற்றை யெல்லாம் காணுது போதியோ பூம்பாவாய்" என இவற்றின் காண்தகு சிறப்பையும் சுட்டிக் காட்டுகின்ருர். மண்ணினில் பிறந்தார் பெறும் பயன், இவற்றைக் காணுதலும் இவ் விழாக்களில் பங்கு பெறுதலுமே என்று சேக்கிழாரும் வலியுறுத்துகிருர்.

கோயில்கள், வழிபாட்டு இடங்களாக மட்டுமல்லாமல், கிராமத்தின் முழு வாழ்விற்கும் மையமாகவும் இருந்தன. இந்தியக் கோயில்கள் கோட்டைகளாகவும் கஜாணக்களாகவும், நீதிமன்றங்களாகவும், காட்சிக் கருவூலங்களாகவும், கல்விக் கூடங்களாகவும், கலைப் பண்ணைகளாகவும் இருந்தன. பகைவர் படையெடுப்புக்களின் போது கோயில்கள் மக்களுக்குத் தஞ்சம் அளித்துப் பாதுகாத்துள்ளதை வரலாறு காட்டும். பல கோயில்கள் பஞ்ச நிவாரணிகளாக உதவியிருக்கின்றன. திருவீழிமிழலையிலும் திருவாவடுதுறையிலும், சம்பந்தர் கோயில் பண்டாரத்திலிருந்தே உதவி பெற்றிருத்தல் வேண்டும் என்பர். கோயில் பண்டாரத்திலிருந்து தனக்குப் பொன்னும் பொருளும் தரும்படி நாகைக் காரோணத்து இறைவனைச் சுந்தரர் வேண்டுகிருர். மகேசுரபூசை, பாவாடை சாற்றுதல் ஆகியவை இவ்வாறு எழுந்த அன்னதான முயற்சிகளே. கோயில்கள் பெருநிலக் கிழாராகவும், கொள்முதல் பங்கீட்டு நிலையமாகவும், வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனமாகவும்கூட இயங்கி இருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, சமுதாய வாழ்விலும் அதன் வளர்ச்சியிலும் இடைக்காலக் கோயில்கள் தலையாய இடம் பெற்றுத் திகழ்ந்தன.

அரசர் முதல் சாதாரணக் குடிமகன் ஈருக அனைவருமே கோயிலைத் தம் உயிராகக் கருதி, அதில் திருநந்தா விளக்கு எரிக்கவும், பூசை செய்யவும், விழாச் செய்யவும் ஏராளமான நிலங்களையும், நகைகளையும், பாத்திரங்களையும், கால் நடைகளையும் வாரி வழங்கினர். இந்தச் சொத்துக்களையும், கோயில் பரிவாரங்களையும் மேற்பார்க்கவும், பல அதிகாரிகள் இருந்தனர். சிறிய கோயில்கள் அர்ச்சகர் பொறுப்பில் விடப்பட்டன. மாகேசுவரர் என்ற துறவிகள் ஆட்சியிலும் சில கோயில்கள் இருந்தன. சில கோயில்கள் கோயிலைச் சார்ந்த மடத்துத் தலைவர்கள் ஆட்சியில் இருந்தன. சில கோயில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன. நடுத்தர வருவாயுள்ள பெரிய கோயில்களில் அக் கோயிலுக்கென்றே தனி ஆட்சிக் குழு இருந்தது. கோயில் பொக்கிஷ சாலை ஸ்ரீபண்டாரம் எனப்படும். அதற்குத் தனி அதிகாரி உண்டு. எல்லாக் கோயில்களின் வரவு செலவுக் கணக்குகளும் ஆண்டுதோறும் அரசாங்க அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்டன. சாதாரணமாகக் களவு போன்ற குற்றங்களுக்குச் செலுத்தப்படும் அபராதம் கோயிலையே சேரும்படி அமைக்கப்பட்டிருந்தது. இன்ன குற்றத்தைச் செய்தவன் இத்தனை ஆண்டு வரை கோயிலில் விளக்கெரித்தல் வேண்டும். கோயிலுக்கு இத்தனை காணம் நெய்யும், இத்தனை கால் நடைகளும் விட வேண்டும் என்பன போன்ற அபராதங்கள் விதிக்கப்படும். இதனல் கோயில் வருவாய் பெருகி, கோயில் காரியங்கள் ஒழுங்காகவும் எளிதாகவும் நடைபெறுவதோடு, குற்றவாளியின் மனம் பண்பட்டுத் திருந்த ஏதுவாகிறது.

கோயில்களும் அவற்றைச்சார்ந்த மடங்களும் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய நாக

ரிகப் பண்பாட்டிற்கும் நிலைக்களங்களாக விளங்கின. அரசாங்கமும் மக்களும் பொறுப்பேற்காத நிலையில்கூடக் கோயில்களே கல்விப் பணியை முன்னின்று நடத்தியதைப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருவொற்றியூர்க் கோயிலில் பிரபாகர மீமாம்சம், ருத்ரம், புராணம், சிவதருமம், பாரதம் ஆகியவை கற்பிக்கப்பட்டதாக அக்கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது. புராண சாத்திரங்கள்மட்டுமல்லாமல் வியாகரணம், வான இயல் போன்ற கலைகளும் கோயில்களில் கற்பிக்கப்பட்டன. இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட உதயேந்திரம், காசாக்குடி, தண்டன் தோட்டம், கொற்றங்குடிப் பட்டயங்கள் அவன் காலத்தில் சதுர்வேதிகள், திரிவேதிகள், சோமயாஜிகள், பட்டர்கள், ஷடங்கவித்கள், கிரமவித்தர் ஆகியோர்களுக்கு ஊர்களும் தானமாக அளிக்கப்பட்டதைக் கூறுகின்றன. இராசேந்திரனது எண்ணாயிரம் கல்வெட்டு வேதம் கற்பிக்க நிவந்தம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. ரிக்வேதத்தையும் யஜுர் வேதத்தையும் கற்பிப்பதற்காக இரண்டு ஆசிரியர்கட்கு நிலமும் கிடை விருத்தியாக அளிக்கப்பட்டதாகச் சுசீந்திரத்திற்கு அருகிலுள்ள புரவசேரிக் கல்வெட்டு கூறுகிறது. வீரராஜேந்திரனது திருமுக்கூடல் கல்வெட்டொன்று, கோயில் ஞான மண்டபத்தில் வேதம், சாத்திரம், வியாகரணம் முதலியவை கற்பிக்கப்பட்டதாகக் கூறுகிறது. இவ்வாறே பல கோயில்களில் தரும சாத்திரங்கள், புராணங்கள், வியாகரணம், தர்க்க சாஸ்திரம், வான நூல், மருத்துவம் போன்ற பலவும் கற்பிக்கப்பட்டு வந்தன. கற்பிப்பதோடு அல்லாமல் இராமாயணம், மகாபாரதம் போன்ற புண்ணிய கதைகள் நாள் தோறும் காலட்சேபங்களாகவும் சொல்லப்பட்டு வந்தன. கல்வி கற்க முடியாத நிலையினரும் இத்தகைய காலட்சேபங்களால் கல்வியின் பயனை அடைய முடிந்தது.

கடிகைகளும் மடங்களும் சீரான கல்வி முறையைத் திறம்பட வகுத்து அமைத்திருந்தன. காஞ்சிபுரம் கடிகை மிகப் புகழ் பெற்ற ஒன்று. சாலைகள் எனப் படுவனவும் குருகுலம் போல் அமைந்த கல்வி நிலையங்களே. மிஞ்சிறைச்சாலை, ஸ்ரீவல்லபப் பெருஞ்சோலை, காந்தளூர்ச்சாலை என்பன குறிப்பிடத்தக்கன. இவைகள் கோயிலை ஒட்டியே செயல்பட்டு வந்தனவாகையால் சமயத் தொடர்புடைய பண்பாட்டுக் கழகங்களாகப் பொலிந்தன.

வேதாகமப் பாடசாலைகளே யன்றித் தேவாரப் பாடசாலைகளும் கோயிலைச் சார்ந்து எழுந்தன. தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு ஆகியவற்றை முறையாக ஓதும் முறை கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பே பரவி விட்டதைத் திருவல்லம் கல்வெட்டால் அறியலாம். முதலாம் பராந்தக சோழன் காலம் தொடங்கி, தொடர்ந்து திருப்பதியம், திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்க்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டு வந்துள்ளதைப் பல கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோயில்களில் தேவாரப் பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கு என்றே தேவாரநாயகம் என்ற அதிகாரியும் இருந்ததாகத் தெரிகிறது.

சமயச் சொற்பொழிவுகளும், சமய வாதங்களும், சமய ஆராய்ச்சிகளும் கோயில்களிலும் மடங்களிலும் நடைபெற்று வந்தன. இவற்றின் தொன்மைக்கு அமராவதி சிற்பம் ஒன்று சான்று கூறுகிறது. பெண்களும் இங்நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுள்ளதை அச் சிற்பத்தால் அறிகிறோம். பிற்காலத்தில் இந்து சமயத்திற்கும் புறச் சமயங்கட்கும் நிகழ்ந்த வாதங்கள் பலவும் கோயில்களிலும் மடங்களிலுமே நடந்ததும் இங்கு நினைக்கத் தக்கது. சேக்கிழார் பெரிய புராணம் இயற்றியதும் அரங்கேற்றியதும் தில்லைக் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் தான். கம்பன் தன் பெருங்கலைக் கோயிலை அரங்கேற்றியதும் திருவரங்கப் பெருங் கோயிலில்தான். தேவாரமும், திவ்யப் பிரபந்தமுமாகிய பக்தி இலக்கியப் பேராறு உற்பத்தியானது தெய்வ சந்நிதானத்தில் தான். பக்திப் பண்ணைகளாக மட்டும் அன்றி, நாயன்மார் ஆழ்வார்கள் காலங்களில் கோயில்கள் சமயப் பிரசார நிலையங்களாகவும் விளங்கின எனலாம்.

கோயில்கள் நீதி மன்றங்களாகவும் செயல்பட்டன. அதனால் பிரமாணங்கள் பெரும்பாலும் கோயில்களில்தான் எடுத்துக் கொள்ளப்பட்டன. கோயில்களில் எடுக்கும் உறுதிமொழிகள் தெய்வத் தன்மை பெற்றதாகக் கருதப்பட்டன. தண்டனையும் தெய்வ வழிபாடாகவே அமைந்தது. இந்த வகையிலும் மக்களின் தார்மீக ஒழுக்கக் கட்டுப் பாட்டிற்குக் கோயில் அரணாக நின்று உதவியது. சிறைச் சாலைகட்கு வேலையே இல்லாமல் இந்த அறச்சாலைகளே சீர்திருத்தப் பள்ளிகளாகவும் இயங்கிச் சமுதாயத்தைச் செம்மை நெறியில் செலுத்தி வந்தன.

பக்திப்பாடல்களே யன்றிப் பொதுவாகவே இசையும் நாட்டியமும் கோயிலின் நாள் வழிபாட்டில் இடம் பெற்றன. பல்வேறு இசைக் கருவிகளைப் பற்றிய குறிப்புக்கள் பல கோயிற் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. நாட்டியத்திற்கான சிற்பச் சான்றுகளை அனேகமாகத் தென்னாட்டின் எல்லாக் கோயில்களிலும் காணலாம். குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, குடக் கூத்து, கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் ஆகியவை சிவன் ஆடிய நடனங்கள் எனச் சிலப்பதிகாரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இசையும் நாட்டியமும் இணைந்ததான நாடகங்களும் கோயிலை ஒட்டியே வளர்ந்தன. தஞ்சை இராஜராஜேச்சுரத்தில் இசை, நடனங்களை வளர்க்க 400 பதியிலார் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் குடியேற்றப்பட்டனர்.

ஒவ்வொருத்திக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் தரப்பட்டன. திருப்பதியம் ஓத 48 பேர் பல கோயில்களிலிருந்து குடியேற்றப்பட்டனர். ஆரியம் பாடச் சிலர் நியமனம் பெற்றனர் என்றெல்லாம் அக்கோயில் கல்வெட்டுக்களால் அறியப் படுகிறது. திருவிழாக் காலங்களில் கோயில் மண்டபங்களில் நாட்டிய நாடகங்களும் பக்தி நாடகங்களும் நடந்தன. வில்லுப்பாட்டு, கரகம். புரவியாட்டம் போன்ற அனைத்துமே கோயிலால்தோன்றியவைதாம். சுருங்கச் சொன்னால், நுண் கலைகள் அனைத்திற்குமே கோயில்தான் தாயாக இருந்திருக்கிறது. கல்லிலே வடித்தெடுத்த சிற்பங்கள் மட்டுமேயன்றி, உலோக வார்ப்படக் கலையும் கோயிலில் தான் தோன்றியது. ஓவியங்கள் புத்த விகாரங்களில் மட்டும் இடம் பெறவில்லை. இந்தியக் கோயில்களிலும் வளர்ந்தது. தஞ்சைப் பெருவுடையான் கருவறையின் உட்புறச் சுவரில் உள்ள சோழர், நாயக்கர், கால ஓவியங்கள் நம் பண்டைப் பெருமைக்குக் கருவூலமாக உள்ளவை அல்லவா?

இந்தியக் கோயில்களைக்காணும் போது, அவற்றால் அவற்றின் வரலாறு மட்டுமா அறியப்படுகிறது? இந்திய வரலாற்றினையே காட்டும் காலக் கண்ணாடிகளாகவும் அன்றோ திகழ்கின்றன, நம் குலதனமான கோயில்கள்!

—தொடரும்

## செய்திச் சுருக்கம்

திருக்குட முழுக்கு விழா :

**தஞ்சை மாவட்டம் நன்னிலம் கோட்டம் திருப்பணிப்பேட்டை ஸ்ரீ அன்னபூரணி உடனுறை சுந்தரேசுவரர் கோயிலில், மிகவும் சிறப்புற நடைபெற்றது. (29-6-67) மண்டலாபிஷேகமும் நன்கினிது நடத்தப் பெற்று நிறைவேறியது.**

இன்னிசைத் திருமுறை விழா :

**திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்ற, ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் நினைவு தாயுமான ஈசர் தேவார நிதியைக் கொண்டு, 12-9-67 ஆவணி மூல நாளில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.**

# வழிகாட்டும் பெருமான்

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.)

சிவபெருமான் ஒருவரே பதி; உயிர்கள் அனைத்தும் பசுக்கள். அவன் ஒருவனே தலைவன்; மற்ற அனைவரும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள். அவன் ஒருவனே ஆண்டான்; மற்ற யாவரும் அடிமைகள். இவ்வாறு வேத சிவாகமங்கள் முழங்குகின்றன. சித்துப் பொருள்களாகிய உயிர்களை எல்லாம் தனது அடிமைகளாகவும், சடப் பொருள்களாகிய உலகமாதியவற்றையெல்லாம் தனது உடமைகளாகவும் கொண்டு விளங்குகின்ற சிவபெருமான், தனக்கே உரிய உடைமைகளை, அடிமைகளாகிய உயிர்களிடத்து வைத்த பெருங்கருணையினுல் ஒரு சில வேளைகளில் அவைகளும் கூடி அநுபவிக்கும்படி வைத்தருளுகின்றுர்.

இவ்வுண்மையை அறியாது, மக்களிற் பெரும்பாலோர், மனைவி யென்றும், மக்கள் என்றும், மாடு என்றும், வீடுஎன்றும் உள்ள பொருள்களை யெல்லாம், தம்முடைய உடைமைகள் என்று எண்ணிக்கொண்டு, அவற்றின் சேர்க்கைக் காலத்தில் மகிழ்வும், பிரிவுக் காலத்தில் துன்பமும் கொண்டு மயங்குகின்றனர். குடிக் கூலிக்கு அமர்த்திக் கொண்ட வீட்டைத் தமது சொந்த வீடென்று கொண்டு அதுபற்றித் துன்புறுவாரில்லை. ஆனுல் தம்முடைய உடைமைகளல்லாத தநுகரண புவன போகங்களைத் தம்முடையனவென்று கொண்டு, அதற்காக நைந்து வாடுபவர்களை யல்லாமல் அவற்றை இறைவனது உடைமைகள் என்று கண்டு மகிழ்ந்திருப்பவர்களை, இங்கே காணமுடியவில்லை.

மகிழ வேண்டியவற்றிற்குத் துன்புறுவதும் துன்புற வேண்டியவற்றிற்கு மகிழ்வதும் அறியாமையால் நிகழ்வனவாகும். அவ்வறியாமை ஆணவமல அடிப்படையில் உண்டாகிக், கன்மமல நிலைக்கேற்ப நிகழ்வது. கன்மமே பிறப்பிறப்புக்கும், வாழ்வுக்கும் வழி வகுத்துக் கொடுப்பது. கன்மத்தின் விளைவு நல்வினை தீவினையாகிய இரண்டு வகையுட்பட்டு, இன்பம் துன்பமாகிய பயன்களைத் தரும். அவ்வின்ப துன்பங்கள் மாயா மலத்தின் விளைவுகளாகிய தநுகரண புவன போகங்களில் தநுகரரணங்கள் கருவிகளாகப் புவனங்களில் நுகரும் போகங்களில், தநுகரணங்கள் கருவிகளாகப் புவனங்களில் நுகரும் போகங்களாய் இருக்கும். இங்ஙனம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களின் சேர்க்கையால் அல்லலுறுகின்ற உயிர்களுக்குத் துன்பம் நீங்கிய பேரின்பத்தை வழங்கச் சிவபெருமான் செய்யும் அருட்செயல்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று: அவ்வுயிர் வர்க்கத்தினரில் தகுதி வாய்ந்தார் சிலருக்குத் தம்முடைய அதிகார சக்தியை வழங்கி, அவரையும் பிறரையும் ஆட்கொண்டருளுவது.

அரசனது ஆணைபெற்று அதிகாரம் செலுத்துவோர் பலராயிருப்பினும், அரசன் ஒருவனேயாதல்போல, ஆண்டவனது ஆணை பெற்று அதிகாரம் செலுத்துவோர் பலராயிருப்பினும், ஆண்டவன் ஒருவனே யாவான். அரசாங்க அதிகாரிகள் அனைவரும் குடிமக்கள் வகையைச் சேர்ந்தவர்களே யன்றி, அரச வகையைச் சேர்ந்தவரல்லர். அதுபோலவே ஆண்டவனது ஆணைதாங்கிய அதிகாரிகளாகிய தெய்வங்கள் எல்லாம் பசுவர்க்கம் ஆதலன்றிப் பதிவர்க்கமாக் மாட்டாது.

அரசாணை தாங்கும் அதிகாரிகளாவதற்கு, அவ்வப் பதவிகளுக்கேற்ற தகுதிகள் இன்றியமையாதனவா யிருத்தல் போலக், கடவுளாணை தாங்கும் தெய்வப் பதவிகளைப்

பெறுவதற்கும், அவ்வப் பதவிகளைப் பெறுவதற்குரிய புண்ணியங்கள் இன்றியமையாதனவாகும். புண்ணியம் இரண்டு வகைப்படும். ஒன்று பசு புண்ணியம், மற்றொன்று பதி புண்ணியம். பசு புண்ணியம் உயிர்களை நோக்கிச் செய்யப்பெறுவது; பதி புண்ணியம் இறைவனை நோக்கிச் செய்யப்பெறுவது. பசு புண்ணியம் செய்தவர்க்குப் பொன்னுலக வாழ்வு முதலிய இப்பேறுகள் கிட்டுமேயன்றி, முத்திப்பேறு கிட்டாது. பதி புண்ணியமே முத்திப் பேற்றைத் தரவல்லது.

பதி புண்ணியமும் ஆணவ மலம் பற்றறக் கழிய, உடனடியான முத்திப் பேற்றுக்கு இடமாக்குவதும், அதிகார மலம் மட்டும் தங்கி யிருக்கச் சிலகாலம் அதிகாரப் பதவியில் வைத்துப் பின்னர் முத்திப் பேற்றுக்கு இடமாக்குவதுமென, இரண்டு தகுதியிலிருக்கும். இவற்றுள் இரண்டாவதாகக் கூறப்பெற்ற பதி புண்ணியவான்களே அதிகார சத்தி பெற்றவர்களாய் ஆணை செலுத்திக் கொண்டிருப்பார்கள்.

“விரைக்கம லத்தோன் மாலும்
ஏவலான் மேவி னார்கள்
புரைத்ததி கார சத்தி
புண்ணியம் நண்ண லாலே”

என்பது சிவஞான சித்தியார்.

இறைவனது ஆணையை, அவனது கட்டளைப்படி நிறைவேற்றி வருகின்ற உயிர்வர்க்கத்தினராகிய தெய்வங்கள் தம்முட் பதவியுயர்வு பெற்றிருப்பாரை நோக்கி, அவருக்குள்ள உயர்வும் சிறப்பும் தமக்கும் கிட்டுதல் வேண்டுமென்று விரும்பி, அதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுதல் நிகழுமல்லவா அதனைத் திருமூலதேவ நாயனார், தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்துப் பதினெட்டாவது செய்யுளில் விளங்கவைத்துள்ளார். அத்திருப்பாட்டு,

“அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
யதுபதி யாதரித் தாக்கம தாக்கென
இதுபதி கொள்ளென்ற எம்பெரு மானே”

என்பதாகும்.

சிவபெருமானால் விரும்பித் தோழமை கொள்ளப் பெற்றவன் குபேரன். அவன் அப்பேற்றைப் பெறுவதற்குச் செய்த தவம் மிகப் பெரியது. அந்தத் தவப்பயனே அவனை வடதிசைக்கு அதிபதியாகவும், அளகாபுரிக்கு வேந்தனாகவும், சங்கநிதி முதலிய நிதிகளுக்குத் தலைவனாகவும் ஆக்கியது. தவம்-புண்ணியம் என்பன ஒரு பொருளனவாகும். “மேலைத் தவத்தளவே யாகுமாம். தான் பெற்ற செல்வம்” என்ற இடத்தில், முற்பிறப்பிற் செய்த நல்வினையாகிய புண்ணியம், தவம் என்று குறிக்கப்பெற்றது. உலகியலின்பங் குறித்த புண்ணியமாகிய தவத்தை நோக்க, இறையியலின்பங் குறித்த புண்ணியமாகிய நற்றவம் மிக மிகவுயர்ந்தது. முன்னர்க் கூறிய தவம் முற்றுகிற வேளையில், பின்னர்க் கூறிய தவம் முளைக்கத் தொடங்கும்.

அளகை வேந்தன் செய்த தவம், நிறைதவமானபடியால் அது மிகப் பெரிய பயனை வழங்கியது. சிவபெருமானை விரும்பித் தோழமை கொள்ளத் தேவரும், மூவரும் மற்றயாவரும் அரும்பாடு படுகின்ற நிலையில். சிவபெருமானால் விரும்பித் தோழமை கொள்ளும் பேறு குபேரனுக்கு வாய்த்ததென்றால் அதன் சிறப்பை எவ்வாறு அளவிட்டுரைக்க முடியும்? வடதிசை, சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற பெருமையுடையது. அதனைக் காப்பவன் குபேரனாயின் அவன் மற்றைத் திசைக் காவலரனைவரினும் மேம்பட்டவன் என்பதில் ஐயமுண்டோ?

நிதிவடிவமாக நின்று, எல்லோருக்கும் இன்பம் வழங்குபவள் திருமகள். அவளையும் வைத்தும் புரக்கும் அதிபதியாகக், குபேரன் அமர்ந்திருக்கும் பொழுது, அவன் செய்த தவம், திருமகள் கொழுநனாகிய திருமாலையும், நோக்கும்படி நின்றதில் வியப்பொன்றுமில்லை. இதனை “அதிபதி செய்து அளகை வேந்தனை நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி” என்ற முதலிரண்டடிகளில் ஆசிரியர் உணர வைத்தருளுகின்றார்.

“யதுபதி” யாதவர்களுக்குத் தலைவனாகிய கண்ணபிரான். அவன் திருமகளை மனைக் கிழத்தியாகப் பெற்றவன் என்றாலும், சிவபெருமானது நல்லருள் பெற்றன்றி யாரும் செல்வராக முடியாதென்பதைக், குபேரனது வாழ்வும் அவ்வாழ்விற்குக் காரணமாகிய அவனது நிறைதவமும், திருமாலுக்கு முன்னே தோன்றித் தெளிவு படுத்தின.

அங்ஙனம் உண்டாகிய தெளிவினாலேயே, அவன் "பொன்னும் மெய்ப் பொருளும் தருபவனாகிய சிவபெருமானிடத்து அன்பு வைத்துப் பூசித்து, நிலையான செல்வத்தைத் தனக்கு வழங்க வேண்டுமென்று அவரிடம் விண்ணப்பித்துக் கொண்டான். இதனை "யதுபதி ஆதரித்து ஆக்கமது ஆக்கென" என்னும் மூன்றாவது வரியால் அறிகிறோம்.

விருப்பங்கள் நிறைவேறவும், வேண்டிய பேறுகளைப் பெறவும் திருமால் சிவபெருமானைப் புசித்த திருத்தலங்கள் பல நமது தென்னாட்டிலும் உள்ளன. அவற்றுட் சில திருமாலுக்குச் செல்வ வளத்தை வழங்கின என்பதும் அறியத்தக்கனவாகும். ஆதரித்தல் என்பது விரும்பிப் பூசித்தல் என்னும் பொருளையுடையது. ஆக்கம் செல்வமென்னும் பொருளினதாயினும், அச்செல்வத்தால் வரும் பிற வளங்களும் அதனுள் அடங்கும். திருமகள் கொழுநனாகிய திருமால் செல்வத்தை ஆக்குவதற்குச் சிவபெருமானிடத்து வேண்டிக் கொண்டமையாலும், அதுவும் நிதிபதியாகிய குபேரனது நிறைதவம் கண்டமையால் நிகழ்ந்ததனாலும், திருவாகச் செல்வமாக விளங்கும் சிவபெருமானது முதற் பெருந்தன்மை, பேரருளுடைமையாதியன தெற்றெனப் புலப்படும்.

யார் எதை வேண்டினாலும் இல்லை யென்னாது ஈயும் பெருங்கொடை வள்ளல், சிவபெருமானொருவரே என்பதை இப்பாடலின் இறுதிவரி உணர்த்துகின்றது. வேண்டியவற்றைப் பெறவழியறியாது மயங்கியலைபவர்கள் சிவபெருமானை நோக்கி விண்ணப்பம் இட்டால் 'இதுவழி' என்று அவன் அவர்களுக்கு உணர்த்துவான். இதனையே, "இதுபதிகொள் என்ற எம்பெருமானே" என்று ஆசிரியர் அருளிச் செய்தார். நமது சமயகுரவர் முதலிய அருளாளர்களின் வரலாறுகளில், இறைவன் அவர்களுக்கு வழிகாட்டியாகப் பல இடங்களில் வந்த செய்திகளும், "செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே", "காட்டுவித்தாலாரொருவர் காணாதாரோ", "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்பனவாகிய அருள் வாக்குகளும் இங்கே நினைவு கூர்தற்குரியனவாம்.

## செய்திச் சுருக்கம்

பிரம்மோற்சவம் :

*திருவலஞ்சுழி ஸ்ரீ சுவேத விக்நேசுவரர் ஆலயத்தில், 29-8-67 முதல் தொடங்கி மிகவும் சிறப்புறத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

வார வழிபாட்டு மன்ற ஆண்டு நிறைவு விழா :

*திருமங்கலம் ஸ்ரீ சாமவேதீசுவரர் திருவருள் வார வழிபாட்டு மன்றத்தின் 13-ஆம் ஆண்டு நிறைவு விழா, 11-8-67 அன்று திரு. ஏ. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில், சிறப்புற நடைபெற்றது.*

# சிவஞான சித்தியார் உரை

(காஞ்சி தொண்டை மண்டலாதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்)

இக்கட்டுரைக்குக் காப்பாக முதலில் ஒரு திருத்தம் உணர்த்தப்படுகின்றது. அஃதாவது, "ஒரு கோட்டன் இரு செவி யன் மும் மதத்தன்" எனத் தொடங்கும் திருவிருத்தத்துள் 'வாரணத்தின்' என்பது 'வாரணத்தன்' என்றிருத்தல் வேண்டும். ஆசிரியர் சிவஞான மாமுனிவர் வாரண முகத்தான் என்றும், தாழ்சடையான் தரும் ஒரு வாரணம் என்றும், வாரண(மும் சிங் கையும்) ஆகுபெயர் என்றும் உரைத்தரு ளினர். வாரணம் அதன் முகத்திற்கு ஆகு பெய ராயிற்று. பின் முகத்தானுக்கு ஆகு பெய ராயிற்று. வாரண முகம் போலும் முகத்தை யுடையான் என்று பொருள் கொள்ளல் வேண்டும். சிவாக்கிர யோகி யர் யானை போன்ற திருமுகத்தார் என்று உரைத்தருளினர். நிரம்ப அழகிய தேசிகர் 'ஒருவாரணத்தன்' என்று பாடங்கொண்டு ஒப்பில்லாத மூத்த நாயனர் என்று உரைத் தார்.

(2) "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" என்றதற்கு மறை ஞான தேசிகரும், சிவாக்கிர யோகியரும் ஞானப்பிரகாசரும் நிரம்ப அழகியரும் பொருளுரைத்தலில் வேறுபட்டிலர். சிவ ஞான முனிவரும் சுப்பிரமணிய தேசிகரும் வேறுவகையிற் பிரித்துப் பொருள் கொண் டனர். "அறு வகைச் சமயத்து—அறு வகைப்பட்டசமயங்களில்நின்று கொண்டு, ஓர்க்கும்—ஓர்த்து உணர்கின்ற, அவ்வவர் பொருளாய்—அவ்வவர் கொண்ட முதற் பொருளாய்" என்பது மாதவச் சிவஞான யோகிகள் கொண்டது. அதை யொட் டியே சுப்பிரமணிய தேசிகரும் எழுதினர். நூலாசிரியர் அவ்வவர் என்று சுட்டியது எவ்வெவரை என வினவின், அறுவகைச் சமயத்தோரை என்னும் விடை அவ்விரு வர் உரையினும் வருவித்துக் கொள்ளப் படும். அறுவகைச் சமயத்தோர் என்று முன்னர்க் கூறிப் பின்னர் அவ்வவர் என்று சுட்டிய நூலாசிரியர் கருத்திற்கு ஒவ்வாத படி 'ஓர்க்கும்' என்று பிரித்தது, யார்க்கும் பொருத்தமென்று தோன்ருது.

(3) 'என்னை இப் பவத்திற் சேராவகை' எனத் தொடங்கும் திருவிருத்தத்துள் "மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு" என்றதற்கு ஆசிரியர் மறை ஞான தேசிகர் ஸ்ரீமெய்கண்ட தேவ நாய ஞர் அருளிச் செய்த ஞான சாத்திரமான சிவஞான போதத்தை எமது தலைமேல் வைத்துக் கொண்டு என்றுரைத்தார். சிவாக்கிர யோகிகள், 'சிரசாக வைத்துக் கொண்டு' என்ருர். சிவஞான மாமுனி வரும் அதையொட்டிச் 'சிரத்தானமாகக் கொண்டு' என்ருர். ஞானப்பிரகாசர், "சென்னியிற் கொண்டென்பது பூஜ்ய வார்த்தை; செவிக்கு ஏற்கக் கேட்டு மனத் தில் உட்படுத்திச் சிந்தித்து" என்றுரைத் தார். நிரம்ப அழகியர், 'என்னுடைய தலை மேல் வைத்துக் கொண்டு' என்றே உரைத்தார். சுப்பிரமணிய தேசிகர், அம் முனிவர் பிரானுர் உரையையே முற்றுங் கொண்டவர். நம் முனிவர், 'சென்னியின்' என்றதில் இன்னுருபு உவமப் பொருட்டு என்றும், வைத்து என்றது, 'அன்போடி யைந்த வழக்கு என்ருற் போல உபசார வழக்கு 'என்றும் உரைத்த திறம்' அவரது பேரறிவின் தனிச் சிறப்பை உணர்த்தும்.

(4) 'மறையினுல் அயனுல் மாலால்' எனத் தொடங்கும் திருவிருத்தத்திற்குச் சிவஞான முனிவர் இலக்கணக் குறிப்பும் எடுத்துக் காட்டுங் காட்டி விளக்கம் மிகச் செய்தது யாவராலும் போற்றப்பெறும்.

ஆண்டுக் கூறிய வேறு பொருளும் அறிதற் பாலது.

(5) 'அருளினுல் ஆகமத்தே அறியலாம்' என்றதன் உரையில், 'சிவாகமத்தின் அனுபவம் உடைய தேசிகர் அருளிச் செய்யும் உபதேசத்தால் கேட்டறியலாம்' என்றுரைத் தருளியதால், 'ஆகமத்தே' என்றதை ஆகமம் தே என்று பிரித்துப் பொருள் கொள்ள வைத்தார் என்று தோன்றும். அவ்வாறு இன்றேல், ஆகமத்தே அருளினுல்' எனச் சொல்வகை (ஆகமம்+தே) செய்தலும், 'ஆகமத்தே' என்றதை ஏழாம் வேற்றுமை இடப்பொருட்டாக்காமல், சிவாகமத்தின் அனுபவம் உடைய தேசிகர் என எழுவாய் வேற்றுமைப் (பெயர்ப்) பொருட்டாக்கியதும் 'அருளினுல்' என்பதை அருளிச் செய்யும் உபதேசத்தால் என்றதும், அறியலாம் என்றதற்குக் கேட்டறியலாம் என்றதும் எப்படிப் பொருந்தும்? ஆகமம் என்பதைச் சிவாகமத்தின் அனுபவம் என ஆகுபெயராயும், தேசிகரை 'தே' என்றதாயும் கொண்டே உரைத்தார் என்று கொள்வதே தகுவது. ஈண்டு நுணுகி ஆராய்ந்தார்க்கே இது விளங்கும். 'ஆகமத்தே' என்பது அருணந்தி தேவ நாயனருக்கு ஏழனுருபேற்றதாகும். நம் முனிவர் பிரானுர்க்கு இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகையாயிற்று. ஏகாரம் ஏழனுருபாதலைத் தொல்லாசிரியரே உணர்வர். இக்காலப் புலவர் ஏற்றுக் கொள்ளார். 'வயிற்றினகம் படியே' (வயிற்றின் அகம்பு அடி ஏ), "எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே" (அப்பர்) எனவும், "மாய நெடுமையாலன்றளந்த வுலகெல்லாந் தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையா ளளந்தாள்"(கம்பர்)எனச் செய்யுள் வழக்கிலும், நேரே வந்தான், தெருவே போனுன், என் முன்பே வந்து சொன்னுன். 'பைத்தியக்காரன் பின்னே பத்துப்பேர் செல்வர்' என உலக வழக்கிலும் ஏகாரம் ஏழனுருபாதலை உணர்க. "தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே" என்புழிச் (தொல். சொல். 53) சேனவரையர் பொருள் தெரிநிலைக்கண் என்று ஏழனுருபு விரித்துரைத்தவாறு அறிக. 'தொல்நெறி மரபின தோன்றலாறே (தொல். சொல். 110 என்புழியும் அன்னதே.

"மாசறு காட்சி, ஐயம்
திரிவின்றி விகற்பம் முன்ன
ஆசற அறிவ தாகும்;
அனுமானம் அவின பாவம்
பேசறும் ஏதுக் கொண்டு
மறை பொருள் பெறுவ தாகும்;
காசறும் உரைஇம் மானத்து
அடங்கிடாப் பொருளைக் காட்டும்".

என்பது அளவை யியலின் இரண்டாவது திருவிருத்தம். அதில் காட்சி யளவையின் விளக்கமாக ஒன்றரை அடியும், கருதல் அளவையின் விளக்கமாக ஒன்றரை அடியும், உரையளவையின் விளக்கமாக ஈற்றடி ஒன்றுமாக அமைந்திருத்தலும், முறையே ஐயம் திரிபு சவிகற்பம் நிருவிகற்பம், அவினுபாவ ஹேது, உரை (ஆகமப் பிரமாணம்) என்பவற்றின் பெயர் மாத்திரம் கூறப் பட்டுள்ளமையும்; அதனை அடுத்த திருவிருத்தத்தில்,

(1) "கண்ட பொருளை இட்ரடுறவே கருதல் ஐயம்" என ஐயத்தையும்,

(2) "திரியவே கொண்டல் திரிவாம்" எனத் திரிவையும்,

(3) "அவ்விகற்ப வுணர்வினுக்குப் பெயர் சாதி குணமே கன்மம் பொருளென ஐந்து உண்டு" எனச் சவிகற்பத்தையும்,

(4) "விகற்ப மில்லாக் காட்சி பொருளின் உண்மை மாத்திரத்தின் விண்டல் இல்லா அறிவாகும்" என நிர்விகற்பத்தையும் முறையே இலக்கணங் கூறி உணர்த்தினுர்.

முற்பாட்டில் உணர்த்திய காட்சி அளவைக்கு உரிய ஐயம் முதலியவற்றை இப்பாட்டில் ஐயம்முதலாகவே கூறினுர். நிருவிகற்பம் ஈற்றிற் கூறப்பட்டதே யன்றி முதலிற் கூறப்பட்டதில்லை. 'அவ்விகற்ப உணர்வு' என இப்பாட்டில் அமைத்த சுட்டு முற்பாட்டிலுள்ள விகற்பத்தைச் சுட்டியது. அது பெயர், சாதி, குணம், கன்மம்,

பொருள் என்னும் ஐந்துறுப்பும் உடைய சவிகற்பத்தைக்குறித்ததே யன்றிநிருவிகற் பத்தைக் குறித்தது அன்று. நிருவிகற் பத்தை விகற்பமில்லாக் காட்சி என்றும், அதன் இலக்கணத்தைப் பொருளின் உண்மை மாத்திரத்தின் விண்டல் இல்லா அறிவாகும் என்றும் இப் பாட்டிற் கூறிய வரே, "மாசறு காட்சி" எனத் தொடங்கும் அப்பாட்டில் நிரு விகற்பத்தைக் கூற வில்லை; நூலாசிரியர் அவ்விகற்பம் என்று சுட்டியும், அதன் இலக்கணத்தைத் கூறி யும் நிருவிகற்பத்துக்குத் தனியே இலக் கணம் கூறியும் உணர்த்தியதால், விகற்ப முன்னு என்பதில் விகற்பமே நிருவிகற்பம் அன்று என்பது உறுதிப்பட்டது. ஈண்டு இதை அறிவோர், அவ்விரண்டையும் உளங்கொள்வாராக.

அவ்விரண்டாவன:—(1) 'மாசறு காட்சி, என முதலும், பாட்டில் உள்ள விகற்பம் என்றது அடுத்த பாட்டில், 'அவ்விகற்பம்' என்று சுட்டி இலக்கணங் கூறப்பட்ட ஒன் றும்; (2) ஐயம், திரிவு, சவிகற்பம், நிருவிகற் பம் என்னும் முறையில் அமைத்து, இலக் கணங் கூறப்பட்டது மூன்ருவது பாடல் என்ப தொன்றுமாம்........அவ்வாறிருக்க, "விகற்ப முன்னு" என்பதற்கு "நிருவிகற்ப வுணர்வைத் தனக்கு முன்னுகக் கொண்டு" என்றுரைத்தும் ''விகற்ப மென்றது தலைக் குறை" என்று இலக்கணக் குறிப்பெழுதி யும், 'கண்டபொருளை' எனத் தொடங்கும் பாட்டின் உரையில் மேற்கூறிப் போந்த நிருவிகற்ப முதலிய நான்கனுள்............... நிருவிகற்பம் எனப்படும் எனப் பாட்டில் அமைந்த வைப்பு முறைக்கு மாருக உரை கூறியும் விசேடத்தில் இதனுனே நிருவி கற்பம் முதலிய நான்கின் இலக்கணம் கூறப்பட்டது என்றெழுதியும் இருத்தல் எவ்வாறு பொருந்தும்? ஏனைய உரை களில் (முற்காலத்து உரை, பிற்காலத்து உரை) இவ்வாறில்லை. மாதவச் சிவஞான யோகிகள் உரையில் மட்டும் இத்தகைய முறையில் எழுதப் பட்டவை பல உள. அவற்றைத் தொடர்ந்து எழுதிவரின் தமிழ்ச் சைவ சித்தாந்த நூல்களைக் கற் றுணர்வோருக்கு உண்மைப் பொருளை அறிந்து கொள்ளும் நன்மை உண்டாகும் என்று கருதி இம்முதற் கட்டுரையை எழுதினேம்.

★

## செய்திச் சுருக்கம்

திருமுறை விழா :

பரதூர் அகஸ்தீசுவரர் கோயிலில் 16, 17—8—67 ஆகிய இரு நாட்களில் சிறப்புற நடைபெற்றது. அறங்காவலர் திரு. என். காத்தபெருமாள் பிள்ளை அவர்கள் தலைமையில், சித்தாந்தப் புலவர் திரு. சேது சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சமயச் சொற்பொழி வாற்றினர்கள்.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ.,பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

உடலுக்குப் பிரதானம் தலை என்பதைக் குறித்து முன்கட்டுரையில் எழுதியிருந்தோம். இந்தத் தலையினுள்ளேதான் அமுதம் பிறக்கும் பிரம்மரந்திரம் உள்ளது. பஞ்ச பூதங்களுள் நாலு பூதங்கள் ஐக்கியமாகுமிடம் இந்தத்தலை தான். இந்த முக்கியத்துவத்தை அறிந்து நம் பெரியவர்கள் கோபுரம்போல் சிகை முடிந்தும், தலையின் மேல் துணி மூடியும் வைத்துப் பழகினார்கள். சீக்கியர்கள் தலைமுடியை உருண்டையாகத் திரட்டித் தலையில் உச்சியில் முடிந்து, முகத்திற்கும் அச்சிகைக்கும் துணியால் கட்டி வைப்பார்கள். மற்றும் நம் பெரியவர்கள் சிசுக்களுக்குஉச்சியில் விளக்கெண்ணை தடவி வருவதையும் நாம் பார்க்கிறோம். இந்த உச்சிக்கு அதிக வெப்பமாவது, அதிக குளிராவது, அதிக காற்றாவது படுதல் கூடாது. இக்காலத்தில் இரவும் பகலும் வசதியுள்ளவர்கள் மின் விசிறிகளின் அடியில் உட்கார்ந்து வேலை செய்வதும், படுத்துத் தூங்குவதும் நாகரிகப் பழக்கமாக ஆகிவிட்டது. மனிதனுடைய உடலில் உள்ள இரத்தத்தில் ஓர் அளவு நீர் கலந்துள்ளது. அந்த நீர் வறண்டுவிடில் இரத்தம் உறைந்து ஆங்காங்கு உருண்டையாகத் திரண்டு இரத்த ஓட்டம் நின்று இருதயத்திற்கு ஆபத்து உண்டுபண்ணுகிறது. உயிருக்கே ஆபத்து உண்டு பண்ணுவதுமட்டுமல்லாமல் நாளடைவில் அவனுடைய தோலில் உள்ள பசை அற்று, ஒளி மங்கி, நரை திரை மூப்பு விரைவில் வந்து விடுகிறது.

ஆகவே மனம்போன போக்கில் செயற்கை வாசனைத் திரவியங்கள் சேர்த்த எண்ணைகளோ, சாயம் தீண்டு வர்ஸலேன்களோ தலையில் தடவுவதினால் உடலில் நமக்குப் புரியாத உபாதைகள் உண்டாவதன்றிச் சிறு வயதிலேயே முடி உதிர்ந்து வழுக்கு தலை உண்டாவதற்கு ஏதுவாகிறது. நல்ல மூலிகை வர்க்கங்களால் தயார் செய்ததைலங்களைத் தலைக்கு உபயோகிப்பதே சிறந்தது. கூடுமானவரை தலையில் லேசாக எண்ணை இருக்கும்படி செய்தல் நல்லது. ஏனெனில் வெட்ப தட்பங்கள் தலையைப் பாதிக்காது. தலையில் எலுமிச்சம்பழச் சாறு, தைலங்கள் முதலியவைகளைத் தேய்த்துக் குளிர்ந்த தண்ணீரைப் பெருமளவில் ஊற்றிக் கிறுக்கு பிடித்தவர்கள் எத்தனையோ பேரைக் குணப்படுத்தியதை நான் நேரில் கண்டதுண்டு.

தலையில் எண்ணை தேய்த்து குளிப்பதென்னும் பழக்கம் நம்நாட்டில் தொன்றுதொட்டு வரும் பழக்கம். நம் நாட்டுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டு வெப்ப தட்ப நிலைகளுக்கு, எண்ணை ஸ்நானம் வெகுமுக்கியமென்று நம் பெரியோர்கள் நிச்சயித்திருந்தனர். 18 சித்தர்களில் மகத்துவம் பொருந்தியுள்ள தேரையர் எழுதிய கீழ்க்கண்ட விருத்தத்தைக் கவனிக்கவும்.

"ஆறுதிங்கட் கொரு தடவை
வமன மருந் தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற்
பேதியுறை நுகர்வோம்:
தேறுமதி யொன்றரைக் கோர்
தரம் நசியம் பெறுவோம்;
திங்களரைக் கிரண்டுதரஞ்
சவரம் விரும்பிடுவோம்
வீறுசதுர் நாட்கொருகால்
நெய் முழுக்கைத் தவிரோம்;
விழிகளுக்கு அஞ்சனம் மூன்று
நாட்கொரு காலிடுவோம்;
நாறுகந்தம் புஷ்பமிவை
நள்ளிரவில் முகரோம்;
நமனார்க்கிங் கேதுகவை
நாமிருக்குமிடத்தே"

(பொருள்) "ஆறு மாதத்திற்கொரு முறை வாந்தியாகும்படியும், நான்கு மாதத்திற்கொரு முறை பேதியாகும்படியும், மருந்துண்போம். நான்கு நாட்களுக்கொருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்வோம். மூன்று நாட்கொருமுறை கண்களுக்கு மையிடு

வோம். கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும் புட்டங்களையும் நடுராத்திரியில் முகர மாட்டோம்''

ஆகவே வாரத்திற்கிருமுறை அப்பியங்க ஸ்நானம்மிகவும் முக்கியம். நெய்யைத்தலையில் தேய்ப்பதினால் முடி நரைத்து விடுமென்று சிலர் அபிப்பிராயப்படுவது தவறு. என்னுடைய மாமனார் 72வது வயதில் காலமெய்தினார். உயிருள்ள வரையிலும் பசு நெய்யை உருக்கித் தலையில் தேய்த்துச் சிகைக்காய் போட்டுச் சுத்தப்படுத்திக் கொள்வார். அவருக்கு 65 வயதுக்கு மேல்தான் நரை முடிகள் ஒன்றிரண்டு கண்டன. ஆகவே நெய் தேய்த்துக் கொள்ளும் வசதியுடையவர்கள் சுத்தமான பசு நெய்யே உபயோகித்தல் வேண்டும்.

அது சாத்தியமில்லை யெனில் நல்லஎண்ணையை உபயோகித்தல் சாலச் சிறந்தது. அந்த எண்ணெயின் பெயரைக் கூர்ந்து கவனியுங்கள். அது நல்எண்ணெய்! இந்த எண்ணெயைக்கொண்டு தயார் செய்த தைலம் சாலச் சிறந்தது. இவ்வித அப்பியங்கம் செய்வதினால் மூக்கில் வளரும் சதை, காதில் வடியும் சீழ் தொண்டையில் வளரும் சதை முதலியன உண்டாகாது. குழந்தைகளுக்கு முக்கியமாக எண்ணெய்க் குளி மிக்க அவசியம். நல்லெண்ணெய்க் குளியால் உடல் மேனியுறும். கர்ப்பச் சூடு தணியும். இரவில் நீர் அதிகமாகப் போவதைத் தடுக்கும். மது மேகமுள்ளவர்களுக்கு மிக்க பலனைத் தரும். எள்ளுப் பிண்ணாக்கும் முருங்கை இலையும் நீர்ப்பெருக்கைச் சுருக்கும்.

தைலங்கள் கடையில் வாங்கி உபயோகிப்பதைவிட நாமே நம் வீடுகளில் சுத்தமான நல்லெண்ணெய் வாங்கித் தைலங்கள் தயார் செய்து கொள்வது நலம்.

கீழே தைலங்கள் செய்முறைகளை எழுதியுள்ளோம். அதன் படி செய்து வாரத்திற்கொருமுறையாவது எண்ணெய் ஸ்நானம் செய்தல் நன்று.

அறுகம்புல் தைலம்

(பிள்ளையார் மூலிகை) ;

அறுகம்புல் ஒரு பிடி எடுத்து நன்றாகத் தண்ணீரில் அலம்பி விட்டு ஓர் துணியில் வைத்து ஒத்தி நீரெல்லாம் எடுத்து விடவும். பிறகு அதைச் சிறு துண்டுகளாக அறுத்துக் கொண்டு, ஓர் அகன்ற வாயுள்ள பீங்கான் பாத்திரத்தில் இட்டுச் சுத்தமான நல்லெண்ணெய் விட்டு ரவியில் 5 நாட்கள் வைத்தெடுத்து, துணியில் வடித்து புட்டியில் அடைக்கவும். இந்தஎண்ணெயை 2மாதங்கள் வரை உபயோகிக்கலாம். இதனால் கண் குளிரும். உடலிலுள்ள விஷங்கள் நீங்கும். அறிவு விருத்தியாகும்.

சிவன் மூலிகைத்தைலம் :

வில்வப் பழம் 11

நல்லெண்ணெய் படி 1

பசும்பால் படி 1

பழத்திலுள்ள சதையை யெடுத்து வெந்நீர் ½ படி ஊற்றிப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு அந்த வில்வ நீரை எண்ணெயில் ஊற்றிப் பால் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயில் காய்ச்சவும். வெண்ணெயைக் காய்ச்சும் பக்குவத்தில்சிடசிடப்புஅடங்கிக்கீழேயிருக்கும்மண்டி மெழுகுபதமாகித் திரண்டு எண்ணெய் தனியாகப் பிரிந்து வந்த சமயம் கீழே இறக்கி அஸ்கா சர்க்கரை 6 டீஸ்பூன்கள் அளவு அதிலிட்டுக் கலக்கி ஆறவைத்து எண்ணெயை வடித்துப் புட்டியில் அடைக்கவும்.

இந்த எண்ணெயை வாரத்திற்கொரு முறையோ இருமுறையோ தலைகுளி செய்துவரின் பல வியாதிகள் குணமாவதோடு உடல் வன்மை பெறுமென்று அகத்தியர் சொல்லுகிறார். நானும் இத்தைலத்தைத் தேய்த்துக் கொண்டு பலன் பெற்றதுண்டு. நம் வீட்டுப் பெண்களே இவ்விதத் தைலங்களைச் சுலபமாகத் தயார் செய்துகொள்ள முடியும்.

(தொடரும்)

# விளையாட்டே வினையாயிற்று

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

நெருப்பினிடம் விளையாடக் கூடாது. விஷத்தைச் சோதிக்கக் கூடாது. ஆழமான நீரில் ஆடுதல் பிழை. ஆன்றவிந்த ஆன்றோர்களிடம் விகடமாக விளையாடக் கூடாது. இதனை விளக்குவது இந்த வரலாறு.

சாம்பன் :

கண்ணுவ முனிவரும், விஸ்வாமித்திரரும், நாரத முனிவரும் ஒரு சமயம் துவாரகாபுரிக்குச் சென்றார்கள். அங்கே வாழ்கின்ற யாதவர்கள், சாம்பன் என்ற கிருஷ்ண குமாரனைப் பெண்ணாக அலங்கரித்து, வயிற்றைப் பெரிதாக அமைத்து, அம் மாதவ சீலர்களின் முன் நிறுத்தி, ''தபோதனர்களே! இவள் 'பப்ருவின் மனைவி; இவள் கருவுற்றிருக்கின்றாள். ஆண் பிறக்குமா? பெண் பிறக்குமா? நீங்கள் முக்காலமும் உணர்ந்த முனிவர்கள். ஆதலினால் இவள் வயிற்றில் என்ன பிறக்கும்? என்பதைக் கூறுதல் வேண்டும்'' என்றார்கள்.

முனிவர்கள் முனிவுகொண்டு, ''ஓ! யது குலத்தவர்களே! கண்ணனுடைய மகனாகிய இந்த சாம்பன் வயிற்றில், ஓர் இரும்பு உலக்கை பிறக்கும். அதனால் உங்கள் குலம் முழுவதும் அழியப் போகின்றது'' என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

அதனைக் கேட்டு அவர்கள் நடுங்கினார்கள். கண்ணபிரான் இதனை யறிந்து விதியினால் உந்தப்பட்டுள்ள அவர்கட்கு இந்தக் கேடு வரவேண்டியதே என்று திருவுள்ளத்தில் எண்ணினார்.

இரும்புலக்கை :

மறுநாள் யாதவர்களைச் சாம்பலாக்கக் கூடி யமதூதன் போன்ற ஒரு கொடிய இரும்பு உலக்கையைச் சாம்பன் பெற்றான்.

அதனைக் கண்டு அனைவரும் அஞ்சினார்கள். அந்தோ! இது நம் குலத்தை அழிக்குமே? என்றார்கள். அவர்கள் ஒருங்கு கூடி என் செய்வோம்? என்று ஆராய்ந்தார்கள். அந்த உலக்கையை அரத்தினால் ராவிப் பொடியாகச் செய்து, கடலில் கொட்டி விட்டார்கள்.

''கிருஷ்ணர் பலராமர் முதலிய தலைவர்கள், இன்று முதல் யாரும் மதுபானஞ் செய்யக் கூடாது. செய்தால் செய்தவனைச் சூலத்தில் குத்திக் கொல்லப்படும்'' என்று பறையறைவித்தார்கள்.

அவசகுனங்கள் :

காலம் என்ற ஒன்று கரிய உருவுடன், மொட்டையனும் பயங்கரனுமாக எல்லோருடைய வீடுகளிலும் உலாவியது. அதனைக் கண்டு அவர்கள் அஞ்சி லட்சக்கணக்கான பாணங்களால் அடித்தார்கள். எல்லாவுயிர்களையுங் கொல்லும் அக்கால புருஷன் பாணங்களால் அடிபடவில்லை. அது தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. தினந்தோறும் உரோமஞ் சிலிர்க்கும்படியான பல பயங்கரமான உற்பாதங்கள் காணப்பட்டன. பெருங் காற்று வீசியது; உடைக்கப்பட்ட மண்பாண்டங்களும் எலிகளும், தெருவில் கிடந்தன; இரவில் தூங்குகின்றவர்களின் கூந்தல்களையும் நகங்களையும் எலிகள் தின்றன. விருஷ்ணி

கள் போஜர்கள் முதலியவர்களின் வீடுகளில் நாகணவாய்ப் பறவைகள், "சீ சீ" "கூ கூ" என்று அமங்கலமாக ஒலித்தன. ஆடுகள் நரிகளைப் போல ஊளை யிட்டன; பசுக்களிடத்திலும் ஒட்டகங்களிடத்திலும் கழுதைகள் பிறந்தன; நாய்களிடத்தில் பூனைகள் பிறந்தன; கீரிகளிடத்தில் எலிகள் பிறந்தன.

அப்போது விருஷ்னிகள் வெட்கம் இன்றித் தீய செயல்களைச் செய்தார்கள். பெரியோர்களை நிந்தித்தார்கள். ஆசாரியர்களை அவமதித்தார்கள். பெண்கள் தங்கள் கணவனை வஞ்சித்தார்கள்; நெருப்பு சுடர் விட்டு இடமாகச் சுற்றியது. சூரியன் உதய காலத்திலும், அஸ்தமன காலத்திலும், தலையற்ற புருஷ சரீரங்களால் நெருக்கமாகச் சூழப்பட்டவனாகக் காணப்பட்டான். சுத்தமாக இருக்கும் சமையலறைகளில், மிகவும் நன்ருகப் பக்குவம் செய்யப்பட்ட அன்னத்தில், ஆயிரக்கணக்கான புழுக்கள் காணப்பட்டன.

இத்தகைய கொடிய நிமித்தங்களைக் கண்டு, கண்ணபிரான் இவ்விதம் நேர்ந்திருக்கும் காலத்தின் மாறுதலையும், பதின்மூன்ருவது நாளில் அமாவாசை வந்ததையும் கண்டு, அவர்களைப் பார்த்து "ராகுவினல் மறுபடியும் இந்தச் சதுர்த்தசியானது பௌர்ணமியாகச் செய்யப்பட்டது. பாரத யுத்தம் நெருங்கிய பொழுதும் இது மாதிரி 13-வது நாளில் அமாவாசை வந்தது. நம்முடைய நாசத்தின் பொருட்டு இப்படி இப்பொழுது நேர்ந்துளது" என்ருர். அந்தக் கண்ணபிரான் பாரத யுத்தம் நடந்து முப்பத்தாருவது வருஷம் வந்திருக்கிறது என்றும், புத்திர சோகத்தால் நன்கு வருத்தப்பட்ட காந்தாரியானவள், "என் குலம்போல் கண்ணு! உன் குலம் அழியக் கடவது" என்று கூறியதையும் நினைத்து, "இதோ இந்த யதுகுலம் அழியப் போகின்றது" என்று கூறிஞர். பின்னர் தீர்த்த யாத்திரை செய்யுமாறு கட்டளையிட்டனர். எல்லோரும் புண்ணிய தீர்த்தங்களில் முழுக வேண்டும் என்று பறையறைந்தார்கள்.

தீக் கனவு :

கருமை நிறமுள்ளவளும் வெண்மை நிறமுள்ளவளுமான பெண், சிரித்துக்கொண்டு இரவில் துவாரகையில் நுழைந்து, பெண்களுடைய மங்கல நாணைக் களவு செய்து கொண்டு ஓடியதாகக் கனவு கண்டார்கள். காக்கைகளும் கழுகுகளும் தம்மைக் கொத்தித் தின்பதாகக் கனவு கண்டார்கள்.

கண்ணபிரானுடைய ஒளிமயமான சக்கரம், யாதவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே விண்ணில் சென்று மறைந்தது. கிருஷ்ணருடைய தேரை அவருடைய குதிரைகள் இழுத்துக் கொண்டு சமுத்திரத்திற்கு மேலே சென்றன. பலராமருடைய கொடியாகிய பனையும், கண்ணனுடைய கொடியாகிய கருடனும் தேவ மாதர்களும் அத்தேரை மேலே இழுத்தனர்.

பின்னர் யாதவர்கள் யாவரும் மதுமாம்சம் இவைகளை நிரம்பத் தயாரித்துக் கொண்டு, வாகனங்களில் ஏறிக் கடற்கரையில் விளங்கும் பிரபாச பட்டினத்தைச் சேர்ந்தார்கள். (இது மேற் கடற்கரையில் உள்ளது. இதன் அருகில் சோமநாதம் என்ற சிவஸ்தலம் உள்ளது.)

யோகத்தை அறிந்தவரும் மகாத்மாவுமான உத்தவர், அவர்களிடம் விடைபெற்றுச் சென்ருர்.

பிரபாச பட்டினத்தில் யதுகுலத்தார்கள் யாவரும் ஒருங்குகூடிக்காலத்தால் தூண்டப்பட்டவர்களாகி, அளவுக்கு மேல் மது பானஞ் செய்தார்கள். சாத்யகி, பிரத்யும்நன், கிருதவர்மா முதலியோர்கள் ஒருவரை யொருவர் நிந்தித்து, மதங்கொண்டு கடல் ஓரத்தில் முளைத்திருக்கின்ற இரும்புக் கோரைகளைப் பிடுங்கிஞர்கள். அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலக்கையாக ஆயின. அவற்ருல் அடித்துக் கொண்டார்கள். மகன் தந்தையையும், தந்தை மகனையும், அண்ணன் தம்பியையும், தம்பி தமையனையும் அடித்துக் கொன்ருர்கள். அநிருத்தன், சாம்பன் முதலிய கிருஷ்ண குமாரர்கள், பௌத்திரர்கள் யாவரும் மாண்டார்கள், ஐந்து லட்சம் பேர்கள் அழிந்தார்கள்.

கண்ணபிரான் இந்த அழிவைக் கண்டு, இது இவ்வண்ணம் நடக்கத் தக்கதுவே யென்று கருதினர். பின்னர்க், கண்ணபிரானும் தாருகனும் பப்ருவும் பலராமர் இருக்கும் இடத்தை நோக்கி வேகமாகச் சென்ருர்கள். கிருஷ்ணர் தாருகன் என்ற

தனது தேர்ப்பாகனைப் பார்த்து, "நீ சென்று அருச்சுனனுக்கு யாதவர்களுடைய அழிவைச் சொல். அவன் இங்கு வரட்டும்" என்று கூறியனுப்பினர். பப்ரு என்பவனை நோக்கி, "நீ சென்று துவாரகையில் பெண்களைக் காப்பாற்று" என்றார். பப்ரு புறப்படும்போது கண்ணனுக்கு அருகிலேயே, வேடனுடைய உலக்கையானது விழுந்து, மாண்டான். அவன் மாண்டதைக் கண்ட வாசுதேவர் பலராமரைப் பார்த்து, "நான் சென்று பெண்களை ஞாதிகளிடம் ஒப்புவித்து வருவேன். அதுவரை நீர் இங்கு இரும்" என்று கூறிவிட்டுத் துவாரகை சென்றார்.

அவர் துவாரகை சென்று தந்தையை வணங்கி, "யாதவ வம்சம் அழிந்து விட்டது. நீர் அர்ச்சுனனுடைய வரவை நோக்கிக் கொண்டிரும். பெண்களைக் காப்பாற்றும். பலராமரை நோக்கிச் செல்கின்றேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். பெண்கள் யாவரும் 'ஓ' என்று கதறி அழுதார்கள். பின்னர் அவர் பலராமர்பால் வந்தார். கண்ணபிரான் வந்தவுடன், யோகஞ் செய்கின்ற பலராமருடைய முகத்திலிருந்து வெண்மையான ஆயிரம் தலைகள் உள்ள நாகம் வெளிப்பட்டது. மலை போன்ற ஆதிசேஷன் என்ற அந் நாகமானது கடலில் பிரவேசித்தது. ஆதிசேஷனை நாகர்கள் நல்வரவு கூறி வரவேற்றார்கள்.

பின்னர் கிருஷ்ணர் ஒரு மரத்தினடியில் அமர்ந்தார். காந்தாரி கூறிய வாக்கியத்தையும், எச்சிற் பாயசத்தைப் பூசிக் கொண்ட பொழுது தூருவாசர் சொன்ன வாக்கியத்தையும் நினைத்தார். வைகுந்தம் போகத் திருவுளங்கொண்டு யோக நிலையில் அமர்ந்தார்.

அப்போது முனிவர்கள் சித்தர்கள் முதலிய உத்தமர்கள் வந்து, கண்ணபிரானை வணங்கி, "பகவானே! நீர் எங்களை விடுத்து வைகுந்தம் செல்லுகின்றீர். இனி வருவது கலியுகம். வெம்மையான அந்த யுகத்தில் எமக்கு உய்வு யாது?" என்று கேட்டார்கள்.

கண்ணபிரான், "நீவிர் வருந்தற்க கலியுகத்தில் உங்கட்கு ஐந்து பொருள்கள் உய்வைத் தரும்.

சந்திரனைச் சடையில் தரித்த சிவபெருமானுடைய திருவடிக் கமலங்கள்; அத்திருவடியைப் பூசிக்க நீர்; அர்ச்சிக்க மலர்; சிந்திக்கத் திருவைந்தெழுத்து; பூசிக்கொள்ளத் திருவெண்ணீறு. ஆக இந்த ஐந்து சாதனங்கள் உங்கட்குத் துணை செய்யும்" என்றார்.

திங்களங் கண்ணிப் புத்தேள்
சேவடிக் கமலம் உண்டு;
கொங்கவிழ் மலரும் உண்டு;
குளிர்தரு புனலும் உண்டு;
தங்கும்அஞ் செழுத்தும் உண்டு;
தவளவெண் ணீறும் உண்டு;
வெங்கலிக் குடைவ தென்னே?
வெளிற்றறி வுடைய ரேபோல்.

பின்னர், அவர்கள் யாவரும் கண்ணபிரானை வணங்கிச் சென்றார்கள்.

இரும்புலக்கையை ராவிக் கொட்டிய பொழுது இறுதியில் மிஞ்சிய துண்டு கடலில் எறியப்பட்டது. அதை மீன் விழுங்கிற்று. அம் மீனைப் பிடித்தவர்கள் அந்த இரும்புத் துண்டைக் காட்டில் எறிந்தார்கள். அதை ஜரன் என்ற வேடன் எடுத்துத் தன் அம்பின் நுனியில் வைத்துக் கொண்டான்.

ஜரன் என்ற அந்த வேடன் தொலைவிலிருந்து, மான் என்று கருதிப் பாணத்தால் அடித்தான். அது கிருஷ்ணர் காலில் பட்டது. அவன் பின்னர் அருகில் வந்து பெருமானுடைய பாதமலர்களைப் பற்றி, "அடியேன் விலங்கென்று விரைந்து அடித்து விட்டேன். என்னை மன்னிக்க வேணும்" என்று வேண்டிக் கொண்டான். கிருஷ்ணர் அவனுக்கு முத்தியைத் தந்தார். கண்ணபிரானுடைய திருமேனியிலிருந்து ஒரு பேரொளி, மூவுலகங்களையும் ஒளியால் நிறைத்துக் கொண்டு வைகுந்தஞ் சென்றது. அப்போது தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், முத்தர்கள் எல்லோரும் பகவானைத் தொழுது துதி செய்தார்கள்.

தாருகன் வந்து கூற, அர்ச்சுனன் துவாரகை வந்து மங்கலமிழந்து தவிக்கின்ற நகரையும் பெண்களையும் கண்டு அழுதான். வாசுதேவர், தன் மருமகனாகிய அர்ச்சுனனைப் பார்த்துப் பெரிதும் வருந்தியழுதார். யாதவர்களின் குல அழிவைக் கூறினார். பிறகு அவர்கள் யோக நெறியால் உயிரை யிழந்தார்கள்.

அர்ச்சுனன் பெரிதும் வருந்தினன். கிருஷ்ணருடைய பதினறுயிரம் மனைவியரும், ஏனைய யதுகுலத்து லட்சக் கணக்கான பெண்களும் அழுதார்கள். கண்ணனுடைய மகன் ப்ரத்யும்நன், அவன் மகன் அநிருந்தன், அவன் மகன் வஜ்ரன். இந்தச் சிறுவனை வஜ்ரனையும் எல்லாப் பெண்களையும் அழைத்துக் கொண்டு தனஞ்ஜயன் புறப்பட்டான். துவாரகை கடலில் முழுகிவிட்டது. விஜயன் யாதவர்கள் அழிந்த ப்ரபாச பட்டினத்தை யடைந்து பார்த்து வருந்தினன்.

கண்ணன் பலராமன் என்ற இருவருடைய திருமேனிகளையும் எடுத்து ஓமத் தீயினல் எரித்தான். முக்கியமானவர்கட்கெல்லாம் தில தர்ப்பணஞ் செய்தான். வழியில் கள்ளர்களான வேடர்கள் வந்து வழிப்பறி செய்தார்கள். அர்ச்சுனன் அப்போது காண்டீபம் என்ற வில்லை வளைக்கும் ஆற்றலை இழந்தான். அவன் வலிமை குறைந்து நின்ருன். அஸ்திர மந்திரங்களை மறந்து விட்டான். வேடர்கள் பல பெண்களையும், பொன் இரத்தினம் இவைகளையும் கவர்ந்து கொண்டு சென்ருர்கள்.

அர்ச்சுனன் இது தெய்வத்தின் செயல் என எண்ணினன். வஜ்ரனை இந்திரப் பிரஸ்தத்தில் அரசாள வைத்தான். ருக்மிணி முதலிய தேவிமார்கள் தீயில் மூழ்கினர்கள். சத்யபாமை முதலியோர் தவ வனம்போய்த் தவஞ் செய்தார்கள். வியாச முனிவரால் தேறுதல் செய்யப்பட்ட அர்ச்சுனன் அத்தினபுரம் வந்து யுதிஷ்டிரரிடம் நிகழ்ந்ததைக் கூறினன்.



திருமயிலைக் கற்பகாம்பாள்

# தாயும் உண்டோ?

(முதுபெரும் புலவர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை, திருச்சிராப்பள்ளி.)

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையார் வாக்கு. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், பிதாவால் குருவும், குருவால் தெய்வமும் அறியப்படுவர். எவ்வுயிர்க்கும் தாயாக நின்று உயிர்களை அவ்வப்போது இறைவன் காத்தருளியதைப் புராணங்களில் காணலாம்.

திருவிளையாடற் புராணத்தில் சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குத் தாயாக வந்து காத்ததையும், புலியின் உருவங்கொண்டு மான் கன்றைக் காத்ததையும் அறியலாம். காத்தது அவசியமே. இறைவன் தாய் தந்தை இல்லாதவன் என்பதைத் 'தாயும் இலி தந்தையிலி தான் தனியன் காணேடி' என்றும், 'தாயிலியாகும் சிவபெருமான்' என்றும் ஆன்றோர் கூறுவர்.

இறைவன் தாயாகத் தோன்றிக் காத்ததை மற்றொரு நிகழ்ச்சியால் அறியலாம். திருச்சிராப்பள்ளியில் காவிரி வெள்ளத்தால் இக்கரை வரமுடியாமல் தவித்து நின்ற தாய்க்காகத் தாயின் உருவங்கொண்டு இரத்தினவதி என்னும் பெண்ணுக்குப் பேறுகாலத்தில் உதவியதைத் திரிசிரா மலைப் புராணத்தில் காணலாம். இதனால் மலைக் கோயில் இறைவனுக்குத் தாயுமானவர் என்னும் பெயர் அமைந்துள்ளது. இதை, 'தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பி' என்றும் கூறுவர் ஆன்றோர். தாயுமானவர் என்னும் அடியார் ஒருவரும் உளர்.

இத்தகைய பெருமானுக்குத் தாயும் உண்டோ என்ற கேள்வி எழலாம். ஒரு வகையில் உண்டு என்று கூறலாம். தாயர்களில் பெற்றதாய் வளர்த்ததாய் செவிலித்தாய் அன்புத்தாய் எனப் பலவகை உளர். ஒருவர் மதுரையில் பிட்டு வணிகம் செய்த செம்மனச் செல்வியாகிய வந்தி என்பவர் ஆவர். பெருமான் எழுந்தருளிய திருக்கைலாயத்திற்குப் பேயின் உருவங்கொண்டு தலையால் நடந்து சென்ற காரைக்கால் அம்மையார் மற்றொருவர்.

வந்தியம்மையார் தினந்தோறும் பிட்டு சுட்டுச் சிவபெருமானுக்கு நிவேதித்து வந்தார். பெருமானும் அவர் அன்பை ஏற்று அவருக்கு நலம் புரியச் சமயம் பார்த்திருந்தார். பாண்டியன் ஸ்ரீமாணிக்க வாசகரைத் துன்புறுத்தியமை காரணமாக வைகை நதியில் வெள்ளம் வந்தது. அவரவர்களுக்குக் கரையடைப்பில் பங்கு கொடுக்கப்பட்டது. வந்திக்குக் கூலியாள் கிடைக்காமல் வருந்தினார், பெருமான் தானே வந்திக்கு ஒரு கூலியாளாய்த் தோன்றி வந்து கரை அடைக்காமல் பிட்டைப் பிட்டுத் தின்று கொண்டே பொழுது போக்கினார். பாண்டியன் கோபங்கொண்டு அவர் முதுகில் பிரம்பால் அடித்தான். அந்த அடி எல்லோர் முதுகிலும் பட்டது. பின்பு பாண்டியன் தன் தவற்றை உணர்ந்தான். இந்நிகழ்ச்சியைக் குமரகுருபர சுவாமிகள்,

அரும்பிட்டுப் பச்சிலை யிட்டு
ஆட்கொள்ளும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய்
தலையன்பிற் கட்டுண்டே

என்று கூறுகிறார். இதில் வந்தியின் அன்பைத் தலையன்பாகக் கூறப்பெற்றுள்ளது. தலையன்பாவது ஒருவரைப் பற்றிக் கேட்டவுடன் அன்பு செலுத்துவது. 'முன்னம்

அவனுடைய நமாம் கேட்டாள்' என்று அப்பர் கூறுகிறார்.

காரைக்கால் அம்மையார் காரைக்காலில் கணவனுடன் இல்லறம் நடத்த வந்தார். கணவனார் தம்மை விட்டு நீங்கி வேறொருவரை மணந்த காரணமாகத் தம் உடலைப் பேய் உருவமாக மாற்றிக் கொண்டு பெருமான் வீற்றிருக்கும் கைலாய மலைக்குத் தலையாலே நடந்து சென்றார். அப்போது பெருமானுடன் வீற்றிருந்த உமாதேவியார் இங்கு வருவது யார் என்றுகேட்டார். வருகின்றவர் நம்மைப் பேணும் அம்மையார் என்றார். இச்செய்தி காளத்திப் புராணத்தில் அழகாகக் கூறப் பெற்றுள்ளது.

''தோற்றமில் பரஞ்சோதி தன்வாய் திறந்து
ஆற்ற அன்புடன் அம்மையே என்னுமோர்
பேற்றைமுன்பெறப் பேயுரு வெய்திய
சாற்றரும் புகழ்த் தாயை வணங்குவாம்''

இதில் அம்மையாரைத் தாயாகச் சொல்லப்பட்டுள்ளது.

வந்தியம்மையார் தலையன்பு காட்டியதும், காரைக்கால் அம்மையார் தலையால் நடந்ததும் சிறப்பாகப் போற்றப்படுவன. எனவே, நாமும் பெருமானிடத்தில் தாயன்பைக் காட்டி நலன்களைப் பெறுவோமாக!

---

## செய்திச் சுருக்கம்

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் (31-8-67 மற்றும் 1-9-1967), பட்டம் பெற்றவர்களுக்கு, திருக்குறள் பிரதி (உரையுடன்) தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் செயலாளர் திரு. ஏ. மார்க்கண்டவேல் ராஜன் அவர்களாலும், காஞ்சிபுரம் தொண்டமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களாலும், வழங்கப் பெற்றன.

25-8-1967 அன்று சேலத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சமயப் பிரசாரக் கூட்டத்தில், அஸ்தம்பேட்டை வாசியான திரு. தாமஸ் பிலிப், எம்.ஏ.' என்னும் கிறித்தவர், இந்து மதத்தில் சேர்ந்து தாமோதரன் என்று பெயர் சூட்டப் பெற்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துச் சுவாமிகள் இவருக்கு விபூதி பிரசாதம் அணிவித்து ஆசீர்வதித்தார். அக்கூட்டத்திற்கு சேலம் மாவட்ட ஆட்சியாளர் திரு. எஸ். ஏ. விஸ்வநாதன், ஐ. ஏ. எஸ். அவர்களும் வந்திருந்தார்கள்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின்
சமயப் பிரசார நிகழ்ச்சிகள் :

1967 ஆகஸ்டு மாதத்தில் பேரவையின் செயலாளர் அவர்களாலும், மற்றும் சில சந்நிதானங்களாலும், சமயப் பிரசாரக் கூட்டம் கூட்டப் பெற்றது. கோயம்புத்தூர் கௌமாரமடம், மயிலம் பொம்மபுர ஆதீனம், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம், காஞ்சிப்புரம் தொண்ட மண்டல ஆதீனம் ஆகிய திருமடங்களின் தலைவர்கள் ஆங்காங்கே பலப்பல இடங்களில் வந்து, சமயப் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்வித்தருளினர்.

# கட்டுரைப் பட்டியல்

(1966 அக்டோபர் முதல் 1967 செப்டம்பர் வரை)

## கட்டுரைத் தலைப்பு அகர வரிசை


| ஆசிரியர் எழுதிய கட்டுரைகள் : | பக்கம் |
|---|---|
| 1. அம்பிகையின் அருட்கண்கள் | 106 |
| 2. ஆற்றிலே எதிரேறிய அருட்கவிதை | 185 |
| 3. இந்து மதம் | 333 |
| 4. இராமலிங்கரின் இனிய உரைத்திறன் | 156 |
| 5. இராமலிங்கரின் இலக்கியக் கடிதம் | 409 |
| 6. இளங்கோவடிகள் விடுக்கும் இனிய செய்தி | 13 |
| 7. 'ஒரு பொருட் கிளவி' | 406 |
| 8. கந்தர் கலிவெண்பா (பொருட் சுருக்கம்) | 34 |
| 9. 'கருணை மலை' | 80 |
| 10. 'களேபரம்' | 142 |
| 11. கோயில்களே சிறந்த சமுதாய நல நிலையங்கள் | 361 |
| 12. சங்கற்ப நிராகரணம் (சிவசமவாதம்) | 377 |
| 13. சங்க நூல்களில் இராமாயணம் | 49 |
| 14. சங்க நூல்களின் சிறப்பு (கவிதை) | 154 |
| 15. சிதம்பர சுவாமிகளும், பொங்கல் விழாவும் | 276 |
| 16. சிவஞான போதச் சூத்திரங்கள் (உரை) | 425 |
| 17. சிவ புராணம் (உரை) | 563 |
| 18. செந்திற் கந்தன் திருவருள் | 370 |
| 19. சேக்கிழார் செய்யுள் இன்பம் | 367 |

20. சைவ சமயம் 446

21. சைவ நாயன்மார் (சரிதக் குறிப்புகள்) 313

22. சொல்லில் தத்துவம் 521

23. 'தமிழ்ச் சமர்த்தர்' 6

24. திரு இயமகப் பதிகம் (உரை) 470

25. திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு 469

26. திருக்கழுக்குன்றம் (தல வரலாறு) 326

27. திருக்குறளும் சைவமும் 505

34. திருச்சந்த விருத்தம் (உரை) 17, 73, 109, 277, 382, 429, 482

35. திருஞான சம்பந்தர் திருவுள்ளம் 217

36. திருமுருகன் சிறப்பு (கவிதை) 233

37. திருமுருகாற்றுப் படை (பொழிப்புரை) 55

38. திருமுருகாற்றுப் படையின் சிறப்பு 61

39. திருமுருகாற்றுப் படையின் சுவை நலம் 65

40. திருமூலர் திருமந்திரம் 361

41. திருவள்ளுவரின் உவமைத் திறன் 421

42. திருவாசகத்தில் ஒரு பெரு வாசகம் 124

43. திருவாசகமும் சங்க நூல்களும் 149

44. திருவாய் மொழியின் சிறப்பு 274

45. திருவான்மியூர்த் தல வரலாறு 199

46. தென் கிழக்கு ஆசியாவில் திருவாசகமணி 235

47. 'தேனூறு செஞ்சொல் திருக்கோவை' 457

48. 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்' 225

49. 'நானார் என் உள்ளமார்?' 281

50. பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன் 97

51. பொங்கல் விழாவும், புறநானூறும் 221

52. பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள் (மொழிபெயர்ப்பு) 302

62. மதிப்புரைகள் 16, 60, 120, 273, 280, 347, 396, 400, 456, 531

63. முருகனின் திருவுருவங்கள் 463

64. முருகன் பெருமை 228
74. விடை தெரியுமா? 26, 83, 130, 190, 237, 383, 433, 475, 513, 572
84. விடை விளக்கம் 27, 84, 131, 191, 238, 384, 434, 476, 514, 573
85. விநாயகர் அகவல் 557
86. விநாயகர் அகவல் (பொழிப்புரை) 559
87. விநாயகர் மாட்சி 553

அண்ணங்கராசார்யர், பி. ப. (10)

உள்ளுறை பொருள் ஆராய்ச்சி 40, 93
கண்ணனும் உடையவரும் 169
கைங்கர்யச் செல்வம் 287
மறையின் முறைகள் 345
மனுதரும சாத்திரத்தின் மாண்பு 243
வைஷ்ணவ சமயாசிரியர்களின் விசேஷ நூல்கள் 121
ஸ்ரீ இராமாயண ரஸப் பிரவாகம் 440, 486, 526

இராசமாணிக்கனுர், மா. (5)

தமிழ் நூல்களில் சிற்பக்கலை 291, 341, 403
திருமழிசைக் கல்வெட்டுக்கள் 203
பூந்தண்மலிக் கல்வெட்டுக்கள் 248

கிருபானந்த வாரியார் (6)

இறை வழிபாடு 214, 260
சமரசம் 444
நன்றி மறவேல் 545
பெரும் பயணம் 489
விளையாட்டே வினையாயிற்று 591

சுத்தானந்த பாரதியார் (5)

இதுதான் இந்து மதம் 165, 254
உபநிடதக் கலை 296, 334
சைவ வைணவ சமரசம் 113

தாத்தாசார்யார், அக்நிஹோத்திரம் (5)

நமது வேதங்கள் 306
மறையின் இலக்கணம் 393

வேதமும் கடவுட் கருத்துக்களும் 348
வேதங்களின் காவியரசம் 496
வேதத்தின் பிரிவுகள் 452

தத்புருஷ தேசிகர் (10)


எதிரில்லாத உறவு 550
எல்லாம் சிவமயம் 60
கடந்து நின்ருன் 304
கண்டு நின்ருன் 338
கண்ணுதலான் காதல் 180
கோது குலாவிய குணம் 493
தொழப்படுவார் இல்லை 21
பரம காரணன் 117
நித்தமும் நிறைவும் 388
வழிகாட்டும் பெருமான் 583

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS


## பல்பொருட் கட்டுரைகள்


அழகரடிகள்—திருக்கழுக்குன்றச் சிறப்பு 534
அவ்வை. துரைசாமிபிள்ளை—தில்லையில் திருஞானசம்பந்தர் 176, 308, 350, 397
இராமகிருஷ்ணன், கே.—திருத்துழாயின் சிறப்பு 208
இராஜகோபாலன், கே. ஆர்.—பரசுராமர் 359
சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம்—கோயில்கள் (2) 542, 579
தருமை ஆதீனத் தலைவர்—ஆசியுரை 145
தாத்தாசார்யார், என். எஸ்.—கம்பன் பிறந்த ஊர் 491
நாகசாமி, இரா.—கல்வெட்டைக் காத்திடுங்கள் 524
பட்சிராஜன், கே.—ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை 43, 195, 139, 183, 310, 354, 401
பலராமையா, வி.—ஞானசித்தர்களும் சித்த மருந்தும் 24, 78, 119, 174, 251, 299, 391, 455, 530, 589
மோகனசுந்தரம். சிறுவை—பௌத்தமும் தமிழும் 255
வேங்கடசாமி. சீனி—சமணமும் தமிழும் 211
காஞ்சி தொண்ட மண்டல ஆதீனகர்த்தர்-சிவஞான சித்தியார் உரை 586
பஞ்சநதம் பிள்ளை, R.—தாயும் உண்டோ? 595

P600
Pe16
Price Rs 10/=
12-7-73



திருமயிலைக் கபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சியில்
தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களும், பெருமக்கள் பலரும்
கலந்துகொண்டு சிறப்பித்தல். (21—8—67)





CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் அலுவலகத்தில்,
திரு. மா. கே. சாரங்கபாணி முதலியார் அவர்களுக்கும், திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும்
முறையே பாராட்டு வழியனுப்பும், பரிவு வரவேற்பும் அளிக்கப் பெறுதல் (24—8—1967).

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable
Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Parker Press, 11, Bunder Street, Madras-1.